www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஜூலை 2011
ரூ. 7.00



## சமச்சீர் கல்வி ரத்து:

# தனியார் பள்ளி கட்டணக் கொள்ளைக்கு ஜே! ஜே!!

படிப்பகம்

www.padippakam.com

## சமச்சீர் கல்வியை உடனே செயல்படுத்து!
## தனியார் பள்ளி முதலாளிகளின் கட்டணக் கொள்ளையை தடுத்து நிறுத்து!

# “வியாபாரக் கல்விக் கொள்கையைத் தீவிரமாக்கும் பாசிச ஜெயா அரசின் திட்டங்களை முறியடிப்போம்!”

## – தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்-ஆர்ப்பாட்டம்












கல்விக் கொள்ளையர்களுக்கு தமிழகத்தை மொத்தமாகத் திறந்துவிட ஏதுவாக சமச்சீர் கல்வித் திட்டத்தை ரத்து செய்துள்ள பாசிச ஜெயா கும்பலுக்கு எதிராகவும், தனியார்மயத்தினால் கல்வி வியாபாரம் ஆக்கப்பட்டுள்ளதற்கு எதிராகவும் தமிழகமெங்கும் மனித உரிமை பாதுகாப்பு மையமும், புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியும் தோழமை அமைப்புகளுடன் இணைந்து பிரச்சாரத்தையும் ஆர்ப்பாட்டங்களையும் போர்க்குணத்தோடு நடத்தி வருகின்றன.

சமச்சீர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரியும், தனியார் கல்வி நிறுவனங்களின் கட்டணக் கொள்ளைக்கு எதிராகவும் கடந்த மே மாத இறுதியிலிருந்தே தாங்கள் செயல்படும் பகுதிகளில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும், வீடுகளிலும் வேலைசெய்யும் இடங்களிலும் நேரில் சந்தித்து விளக்கியும் இவ்வமைப்பினர் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். அதன் தொடர்ச்சியாக, தெருமுனைப் பிரச்சாரம், ஆர்ப்பாட்டம், பாசிச ஜெயாவின் கொடும்பாவி எரிப்பு, கட்டணக் கொள்ளையடிக்கும் பள்ளிகளின் வாயில்களில் பிரச்சாரம், பெற்றோர்களைத் திரட்டி அத்தகைய பள்ளிகளை முற்றுகையிட்டு போராட்டம் - என பல வடிவங்களில் இப்பிரச்சார இயக்கமும் போராட்டங்களும் வீச்சாக நடந்துள்ளன.

மதுரையில் மனித உரிமை பாதுகாப்பு மையத்தினர் 23.5.2011 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக சமச்சீர் கல்வியை உடனடியாக நடைமுறைப்படுத்தக் கோரி ஆர்ப்பாட்டமும், 6.6.2011 அன்று மாவட்ட நீதிமன்றம் முன்பாக மறியல் போராட்டமும் நடத்தினர். ம.உ.பா. மையத்தின் மதுரை உயர் நீதிமன்றக் கிளை வழக்குரைஞர்கள் ஜூன் 13 அன்று நீதிமன்ற வளாகத்துக்குள் காந்தி சிலை அருகிலும், மறுநாள் ஜூன் 14 அன்று மாவட்ட நீதிமன்றம் முன்பாகவும் தொடர் உண்ணாநிலை போராட்டத்தை நடத்தினர். திருவண்ணாமலையில் 8.6.2011 அன்று மனித உரிமை பாதுகாப்பு மையம் கோட்டாட்சியர் அலுவலகம் எதிரில் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. 14.6.2011 அன்று தருமபுரியிலும் கோவையிலும் ம.உ.பா. மையத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

10.6.2011 அன்று சென்னை - மெமோரியல் ஹால் அருகிலும், திருச்சி -புத்தூர் நாலு ரோட்டிலும் பெற்றோர்களும் மாணவர்களும் திரண்டு சமச்சீர் கல்வியை உடனடியாக நடைமுறைப்படுத்தக் கோரி பு.மா.இ.மு. தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். திருச்சியில் ஜூன் 13 அன்று சத்திரம் பேருந்து நிலையம் அருகே ம.க.இ.க. தோழர்கள் ஜெயலலிதாவின் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை நடத்தி கைதாகினர். 14.6.2011 அன்று சென்னையில் பள்ளிக் கல்வி இயக்குநரகத்தை (டி.பி.ஐ.) முற்றுகையிட்டு ம.க. இ.க; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய அமைப்புகள் பெருந்திரளாக மாணவர்களுடன் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்தில், ஜெயலலிதாவின் கொடும்பாவி எரிக்கப்பட்டு அனைவரும் கைது செய்யப்பட்டனர். ஜூன் 14 அன்று மதுரையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 26 இதழ்: 9
ஜூலை 2011

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

## சட்டமன்றத் தீர்மானம்:

# ஜெயாவின் கபட நாடகம் புலி ரசிகர்களின் விசில்

ஈராண்டுகளுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் சிங்கள இனவெறி பாசிச அரசு நடத்திய தமிழின அழிப்புப் போரின் கொடூரங்களை ஆவணப் படமாக வெளியிட்டிருக்கிறது, இங்கிலாந்தின் சானல்-4 தொலைக்காட்சி. கல்மனம் கொண்டோரையும் கதறச் செய்யும் இக்கொடூரக் காட்சிகளைக் கண்டு வேதனையும் துயரமும் கொள்ளாதோர் இருக்கவே முடியாது. இலங்கை அரசின் இரக்கமற்ற இந்தப் போரை இந்திய அரசுதான் உற்ற துணைவனாகவும் வழிகாட்டியாகவும் இருந்து இயக்கியது.

போரின்போது மட்டுமின்றி, போருக்குப் பின்னரும் வர்த்தக, பொருளாதார, இராணுவ ஒத்துழைப்பு என்ற பெயரில் இலங்கை அரசையும் போர்க்குற்றவாளி ராஜபக்சே கும்பலையும் ஆதரித்து நிற்கிறது. கடந்த ஜூன் 13-ஆம் தேதியன்று தூத்துக்குடிக்கும் கொழும்புவுக்கும் இடையில் பயணிகள் கப்பல் போக்குவரத்தை மைய அமைச்சர் வாசன் தொடங்கி வைத்துள்ளார். அடுத்த கட்டமாக, இராமேசுவரத்துக்கும் தலைமன்னாருக்குமிடையில் கப்பல் போக்குவரத்து தொடங்கப்படவுள்ளது. தேசியப் பாதுகாப்புச் செயலர் சிவசங்கர் மேனன், வெளியுறவுத்துறை செயலர் நிருபமா ராவ் முதலான அதிகாரிகள் அடிக்கடி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு வர்த்தகம், நட்புறவு குறித்து பேசிவிட்டுத்தான் வருகிறார்கள்.

பாசிச ஜெயா தமிழக முதல்வரானதும், இலங்கை அதிபர் ராஜபக்சேவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும், இலங்கையின் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் - என போர்க்குற்றவாளி ராஜபக்சே அரசுடன் கூடிக்குலாவும் இந்திய அரசை வலியுறுத்தி கடந்த ஜூன் 8-ஆம் தேதியன்று நடந்த தமிழக சட்டமன்றத்தின் முதல் கூட்டத் தொடரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அடுத்த நாளில், கச்சத்தீவு தொடர்பாக உச்ச நீதிமன்றத்திலே நடக்கும் வழக்கிலே தமிழகத்தின் வருவாய் துறையையும் ஒரு மனுதாரராகச் சேர்க்க வலியுறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈழத்தமிழ் அகதிகளைத் துரத்தி வேட்டையாடி, ஈழ விடுதலைப் போராட்டத்தை இழிவுபடுத்திய ஜெயா, கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது தமிழ் ஈழத்தை ஆதரித்து சவடால் அடித்ததும், தமிழினப் பிழைப்புவாதிகளால் ஈழத் தாயாகத் துதிக்கப்பட்டார். தேர்தலுக்குப் பின்னர் கொடநாடு போய் படுத்துக் கொண்டு, இன்றுவரை முள்ளிவாய்க்கால் படுகொலைக்காக காகித அறிக்கைகூட வெளியிடாத ஜெயா, இப்போது ஈழத் தமிழர்களின் படுகொலையைக் கண்டித்து இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடைவிதிக்கவும், ராஜபக்சே கும்பலைப் போர்க் குற்றவாளியாக அறிவிக்கக் கோரியும் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்ததும் தமிழினப் பிழைப்புவாதிகளால் போற்றப்படுகிறார். ராஜீவ் படுகொலையைத் தொடர்ந்து பாசிச ஜெயா கும்பலுக்குத் துதிபாடிய வீரமணி கும்பலை எதிர்த்து, தி.க.விலிருந்து விலகி பெரியார் தி.க. எனும் தனிக்கட்சியை உருவாக்கியவர்கள், இப்போது பாசிச ஜெயாவை ஆதரித்து மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்து உலகம் உருண்டை என்பதை நிரூபித்திருக்கிறார்கள்.

ஒருக்கால், தமிழக சட்டமன்றத் தீர்மானத்தின் 'நியாயத்தை' உணர்ந்து, மைய அரசு நாடாளுமன்றத்தில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி, அதனை ஐ.நா.



படிப்பகம்

www.padippakam.com



நிர்வாணமாக்கிச் சுட்டுக் கொல்லும் கொடூரம்:
பயங்கரவாத ராஜபக்சே கும்பலின் போர்க்குற்றத்தை நிரூபித்துக் காட்டும் சானல்-4 தொலைக்காட்சியின் வீடியோ.

மன்றத்துக்கு அனுப்புவதாகவும் வைத்துக் கொள்வோம். இந்தத் தீர்மானத்தை ஒருவேளை ஐ.நா. பொதுச்செயலர் பரிசீலித்தாலும், இதனைச் செயல்படுத்த அவர் ஐ.நா. பொதுச்சபை மற்றும் பாதுகாப்புச் சபையில் இத்தீர்மானத்தை முன்வைத்து, இதற்கு ஆதரவாக பெரும்பான்மை நாடுகளின் வாக்களிப்பைக் கோரவேண்டும். அதன் பிறகு ஐ.நா. மன்றத்தின் சார்பில் ஒரு விசாரணைக் கமிசன் அமைத்து, அதில் போர்க்குற்றம் நடந்துள்ளதை நிரூபிக்க வேண்டும். விசாரணைக்கு இலங்கை அரசு சம்மதிக்க வேண்டும். அதன் பிறகு, விசாரணையின் அடிப்படையில் ஐ.நா. பாதுகாப்புச் சபை இலங்கை மீது பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டும். போர்க்குற்றமிழைத்த இலங்கை அரசு மீது ஒரு காகித கண்டன அறிக்கையைக்கூட இதுவரை வெளியிடாத ஐ.நா.வும் மேற்குலக நாடுகளும், இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க முன்வருமா என்று இன்றைய உலக நிலைமையைச் சற்று யோசித்துப் பார்த்தாலே, இந்த வெற்றுத் தீர்மானத்தின் யோக்கியதை என்ன என்பது தெளிவாகிவிடும். செத்தவன் கையில் வெற்றிலையை வைப்பதற்கும், இந்த வெற்றுத் தீர்மானத்துக்கும் எந்த வேறுபாடும் இல்லை. சட்டரீதியாகவோ, நடைமுறை ரீதியாகவோ எவ்வித மதிப்புமில்லாத இத்தகைய தீர்மானங்களால் எந்தப் பலனுமில்லை.

மைய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தில், கச்சத் தீவு பிரச்சினையை 2008-இல் அன்று வாதியாக இருந்த ஜெயா, மைய அரசையும் மாநில அரசையும் சேர்த்திருந்தார். இன்று அவர்தான் வாதி, மாநில ஆட்சிப் பொறுப்பில் அவரே இருப்பதால், அவரே பிரதிவாதி. இந்தக் கேலிக்கூத்து நடுவே வருவாய்த்துறையையும் அவர் வாதியாகச் சேர்த்துக் கொண்டுள்ளார். மே.வங்க முதல்வராக இருந்த பி.சி.ராய் முயற்சியில் பெருபாரி தீவு எப்படி அன்றைய மே.பாகிஸ்தானிடமிருந்து (இன்றைய வங்கதேசம்) மீட்கப்பட்டதோ அதே போல, கச்சத்தீவை நாடாளுமன்ற ஒப்புதல் இல்லாமல் வழங்கியது தவறு என்று நீதிமன்றத் தீர்ப்பைப் பெறுவதற்கான வாய்ப்புகளும் நியாயங்களும் தமிழக அரசுக்கு நிறையவே இருக்கின்றன என்று கூறி, இந்த கோமாளித்தனம் வெற்றிபெற வாழ்த்துகிறது, தினமணி.

இது, இந்திய அரசின் வெளியுறவுக் கொள்ளையின் அடிப்படையில் உருவான இருநாடுகளுக்கிடையிலான ஒப்பந்தம். மைய அரசின் வெளியுறவுக் கொள்கையில் நீதிமன்றம் தலையிட முடியும் எனில், அமெரிக்காவின் அணுசக்தி அடிமை ஒப்பந்தத்தையே



படிப்பகம்

ஒரு வழக்கு தொடுத்து முறியடித்திருக்கலாமே! அதனால்தான், பாசிச ஜெயாவின் சித்தாந்த வழிகாட்டியும் ஆலோசகருமான துக்ளக் சோ கூட, இந்தத் தீர்மானம், இந்தப் பிரச்சினையைப் பற்றி தமிழகத்தில் எல்லா கட்சிகளும் கவலைப்படுகின்றன என்று காட்டுவதற்கு உதவும், அதற்கு மேல் கச்சத்தீவையே திரும்பப் பெற்றுவிட இந்தத் தீர்மானம் வழிசெய்துவிடாது என்கிறார். இருப்பினும், சீமான், பழ.நெடுமாறன், வைகோ, உருத்திர குமாரன், சத்தியராஜ், மணிவண்ணன், கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன் - என நீளும் தமிழன ஆதரவாளர்கள், வெற்றுத் தீர்மான அட்டைக் கத்தியை ஏந்திச் சுழற்றிக் கொண்டு புறப்பட்டுவிட்ட ஜெயாவை, புறநானூற்றுத் தாயைக் கண்ட திருப்தியில் புளகாங்கிதம் அடைந்து நிற்கின்றனர்.

ஈழத் தமிழர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட, மனிதகுல வரலவாற்றில் நடந்த இன்னுமொரு மிகக் கொடிய இனப்படுகொலை பற்றி அடுத்தடுத்து பல உண்மைகள் வெளியாகிவரும் இத்தருணத்தில், ஈழத்திலும் இந்தியாவிலும் மட்டுமின்றி, உலகெங்கும் போர்க்குற்றவாளி ராஜபக்சே கும்பலுக்கு எதிராக மக்களிடம் பிரச்சாரம் செய்து பொதுக் கருத்தை உருவாக்குவதும், அக்கும்பலைத் தண்டிக்கக் கோரி மக்கள்திரள் இயக்கங்களைக் கட்டியமைத்துப் போராட்டங்களின் மூலம் உலக நாடுகளை நிர்ப்பந்திப்பதும்தான் இன்றைய அவசியமான கடமையாக உள்ளது. ஆனால், மக்களை அணிதிரட்டிப் போராடத் தயாரில்லாதவர்களும், ஒரு கட்சித் தலைவர் மனது வைத்தால் இன அழிப்புப் போர்க் குற்றவாளிகளைத் தண்டித்துவிட முடியும் என்று முட்டாள்தனமாக நம்புபவர்களும்தான் சிறீரெங்கநாயகியின் தயவை எதிர்பார்த்துக் கிடக்கிறார்கள். பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கருணாநிதி எழுதிய கடிதங்கள் ஈழத்தமிழின அழிப்புப் போரை வேடிக்கை பார்ப்பதாக முடிந்தன. ஜெயலலிதாவின் சட்டமன்றத் தீர்மானங்களோ கேலிக் கூத்தாகி நிற்கின்றன.

●

## கே.பி.என். பேருந்துப் பயணிகள் தீயில் கருகிப் பலி:

# தனியார்மயத்தின் கொடூரம்!




**க**டந்த ஜூன் 7-ஆம் தேதியன்று சென்னையிலிருந்து பொள்ளாச்சிக்குச் சென்று கொண்டிருந்த கே.பி.என். சொகுசுப் பேருந்து, காவேரிப்பாக்கம் அருகில் சரக்கு வாகனத்தை மின்னல் வேகத்தில் முந்திச் செல்ல முயன்றபோது நிலைதடுமாறி கவிழ்ந்து தீப்பிடித்ததில், 22 பயணிகள் தீயில் கருகிப் பரிதாபமாக மாண்டுபோனார்கள்.

தமிழகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய இச்சம்பவம் எதிர்பாராத விபத்து அல்ல. சாலை விதிகளைக் கடைபிடிக்காமல், சாலையின் தன்மை, வாகனத்தின் தன்மை, இரவுச் சூழ்நிலை - எதையும் பொருட்படுத்தாமல் தனியார் பேருந்துகளின் கண்முன் தெரியாத வேகம்தான் இக்கோர விபத்துக்குக் காரணம். அந்த வேகத்துக்குப் பின்னே ஒளிந்திருப்பது தனியார் பேருந்து முதலாளிகளின் இலாபவெறி. இதுதான் அனைத்து ஓட்டுக் கட்சிகளின் ஆதரவோடு தீவிரமாக்கப்பட்டுவரும் தனியார்மயத்தின் உண்மை முகம்!

பல ஆயிரம் மக்களின் உயிரைப் பறித்து, பல்லாயிரக் கணக்கானோரை நிரந்தர ஊனமாக்கிய போபால் விசவாயுப் படுகொலையையும், கும்பகோணத்தில் 63 பச்சிளம் குழந்தைகளைத் தனியார் பள்ளி முதலாளியின் இலாபவெறிக்குப் பலிகொடுத்ததையும், இன்னும் பல பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் - தனியார் முதலாளிகளின் இலாபவெறிக்காக மக்கள் கொத்துக் கொத்தாகப் பலியாக்கப்படுவதையும் பட்டியல் போட்டால் பக்கங்கள் போதாது.

தனியார்மயத்தின் கொடூரத்துக்கு ஓர் உதாரணம்தான் இப்படுகொலை என்பதை விளக்கி, ஓசூர் வட்டாரத்தில் ஆயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து பிரச்சாரத்தை மேற்கொண்ட பு.ஜ.தொ.மு., அதன் தொடர்ச்சியாக, கடந்த ஜூன் 15 அன்று மாலை ஓசூர் அரசுப் பேருந்து பஸ் டெப்போ அருகில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டத்தை நடத்தியது. ''தனது இலாப வெறிக்காக 22 பேரின் உயிரைப் பறித்த கே.பி.என். முதலாளிக்குத் தண்டனை வழங்கு! தனியார் பேருந்து, தனியார் சொகுசு விரைவுப் பேருந்துகளை அரசுடமையாக்கு! மக்களின் உயிரைப் பறிக்கும் தனியார்மயத்துக்கு எதிராகப் போராடுவோம்!'' என விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இத்தெருமுனைக் கூட்டம், தனியார்மயத்தின் கொலையையும் கொடூரத்தையும் உணர்த்தி, அதற்கெதிராக உழைக்கும் மக்களைப் போராட அறைகூவியது.

– பு.ஜ. செய்தியாளர், ஓசூர்.

www.padippakam.com

## சமச்சீர் கல்வி ரத்து:

# தனியார் பள்ளி கட்டணக் கொள்ளைக்கு ஜே! ஜே!!

**தனியார் பள்ளிகளின் கட்டணக் கொள்ளையை முறியடிக்க, பொதுப் பாடத்திட்டத்தைச் செயல்படுத்தக் கோரிப் போராட வேண்டும்.**

பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் சமச்சீர் கல்வித் திட்டத்தை ஒரேயடியாகக் குழிதோண்டிப் புதைத்து விடும் நோக்கில், அத்திட்டத்தை அமலாக்குவதைக் காலவரையற்று ஒத்திவைக்கும் மசோதாவை கடந்த ஜூன் 7 அன்று சட்டசபையில் நிறைவேற்றியது. சென்னை உயர் நீதிமன்றம் இம்மசோதாவிற்கு இடைக் காலத் தடை விதித்ததோடு, ஒன்று மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கு கடந்த கல்வியாண்டில் சமச்சீர் கல்வித் திட்டத்தின் கீழ் அமலாக்கப்பட்ட பொது பாடத்திட்டம் தொடர வேண்டும் என்றும், சமச்சீர் கல்விச் சட்டத்தில் கூறப்பட்டபடி, இரண்டு முதல் ஐந்தாம் வகுப்பு மற்றும் ஏழாம் முதல் பத்தாம் வகுப்புகளுக்குப் பொது பாடத்திட்டம் இந்தக் கல்வியாண்டு முதல் அமலாக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பளித்தது. அதேசமயம் அத்தீர்ப்பிலேயே, ''சமச்சீர் கல்வியையும் அதற்கான பாடப்புத்தகங்களை ஆய்வு செய்வதற்குத் தமிழக அரசிற்கு இத்தீர்ப்பு தடையாக இருக்காது; சமச்சீர் பாடப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ள அரசியல் கட்சி, தனிநபர் புகழ் போன்ற சிலவற்றை நீக்கவோ, திருத்தவோ, மாற்றவோ அரசுக்கு முழு அதிகாரம் உள்ளது'' என்றும் தெளிவுபடுத்தியிருந்தது.

பொதுப் பாடநூல்களில் திருத்தம் செய்வதைவிட, சமச்சீர் கல்வித் திட்டத்தையே ஒழித்துவிட வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர் ஜெயா. அதனால்தான் அவர், அரசின் விருப்பப்படி பொது பாடநூல்களில் திருத்தம் செய்யலாம் என சென்னை உயர் நீதிமன்றம் அளித்த சலுகையை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாமல், இந்த இடைக்காலத் தடையை நீக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். உச்ச நீதிமன்றம் தமிழக அரசின் இம்மனுவை தள்ளுபடி செய்துவிட்டபோதிலும், அந்நீதிமன்றம் இப்பிரச்சினை தொடர்பாக அளித்துள்ள தீர்ப்பு சமச்சீர் கல்வித் திட்டத்தை எதிர்க்கும் ஜெயாவிற்கும், மெட்ரிக் பள்ளி முதலாளிகளுக்கும் சாதகமாகவே அமைந்திருக்கிறது. இரண்டாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை மற்றும் ஏழாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை சமச்சீர் கல்வியை அமல்படுத்துவது தொடர்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள பொது பாடத்திட்டத்தையும், பாட நூல்களையும் ஆய்வு செய்ய ஒரு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் அளித்துள்ள உத்தரவை, கிராமத்து நாட்டாமைகள் வழங்கும் கட்டப் பஞ்சாயத்து என்றுதான் சொல்லமுடியும்.

''சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராகத் தமிழக அரசு மேல்முறையீடு செய்யக் கூடாது'' என வலியுறுத்தி, விருத்தாசலம் நகரில், மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கம் நடத்திய 48 மணிநேர உண்ணாவிரதப் போராட்டம்.



''சமச்சீர் கல்வித் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள பொது பாடத்திட்டம் தரமற்றதாக இருப்பதோடு, அப்பாடத்திட்டம் தி.மு.க.வின் பிரச்சாரக் கருவியாகவும் உள்ளது'' என்ற வாதத்தை முன்வைத்துதான் சென்னை உயர் நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடையை நீக்க வேண்டும் எனத் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் கோரியது. பொது பாடத்திட்டம் தரமற்றதாக உள்ளது எனக் கூறி வரும் தமிழக அரசு, தனது இந்த வாதத்திற்கு ஆதரவாக எவ்விதமான ஆதாரங்களையும் முன்வைக்கவில்லை என்பது உயர் நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின்பொழுதே மனித உரிமை பாதுகாப்பு மையம் சார்பாக



படிப்பகம்

வாதாடிய வழக்குரைஞர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், சமச்சீர் கல்வித் திட்டத்தை அமலாக்குவதை காலவரையின்றி ஒத்திவைக்க வேண்டும் என்ற முடிவை, அ.தி.மு.க. அரசு அமைச்சரவைக் கூட்டத்திற்கு முன்பே எடுத்துவிட்டது; இம்முடிவு அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட முடிவு என்பதையும் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் உயர் நீதிமன்ற விசாரணையின்பொழுதே நிரூபித்திருக்கிறது.



நிர்வாகத் திறமையா? பாசிசத் திமிரா?:
200 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட பொதுப் பாடநூல்களை மாணவர்களுக்கு விநியோகிக்காமல் அரசு கிடங்குகளில் பூட்டி வைத்திருக்கும் அநியாயம்.

இந்த நிரூபணங்களின் அடிப்படையில்தான் சென்னை உயர் நீதிமன்றம், ''சமச்சீர் கல்வித் திட்டம் தரமற்றது என்று அரசு ஆராய்ந்து பார்த்ததாகத் தெரியவில்லை; திருத்தச் சட்டம் கொண்டுவருவதற்கு முன்பு நிபுணர்கள் குழுவை அரசு அமைத்து ஆய்வு செய்யவில்லை; சமச்சீர் கல்வி பாடப் புத்தகத்தில் சுயவிளம்பரத்திற்காக சில பாடங்கள் உள்ளது என்று அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. அனைத்துப் பாடப்புத்தகங்களும் சரியானது அல்ல என்று அரசு தரப்பில் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை'' எனத் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆதாரங்களை, இந்தத் தீர்ப்பை எவ்விதப் பரிசீலனையுமின்றித் தடாலடியாக ஒதுக்கித்தள்ளி விட்ட உச்ச நீதிமன்றம், பொதுப் பாடத்திட்டத்தில் குறைபாடுகள் இருப்பதாக ஜெயா கும்பல் கூறியதை வேத வாக்காக எடுத்துக் கொண்டு, அதன் தரத்தை ஆராய ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அதிகார வர்க்க கமிட்டியை அமைக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. தேசிய கல்வி ஆராய்ச்சிக் கழகம் 2005-இல் கொடுத்த வழிகாட்டுதல்களின்படி, கல்வியாளர்களைக் கொண்டுதான் இப்பொழுது பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என உச்ச நீதிமன்றத்தில் நிரூபித்த பிறகும், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பொதுப் பாடத்திட்டத்தின் தரத்தை ஆய்வு செய்ய வேண்டும் என உத்தரவிட்டுள்ளதைக் கட்டப் பஞ்சாயத்துத் தீர்ப்புகளோடு மட்டுமே ஒப்பிட முடியும். மற்ற வகுப்புகளுக்குத் தயாரிக்கப்பட்டுள்ள பொதுப் பாடத் திட்ட நூல்களை ஆய்வுக்கு உட்படுத்த உத்தரவிட்டுள்ள உச்ச நீதிமன்றம், முதல் மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கு அமல்படுத்தப்பட்ட பொதுப் பாடத்திட்ட நூல்களை ஆய்வுக்கு உட்படுத்தாமலேயே, அதனைத் தொடர உத்தரவிட்டுள்ளது. இதனைத் தீர்ப்பின் உள்முரண்பாடு என்பதா, அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் பெருந்தன்மை என்பதா?

அ.தி.மு.க. அரசு சமச்சீர் கல்வியை நிறுத்தி வைக்க கொண்டு வந்திருக்கும் மசோதாவில், அத்திட்டம் குறித்து ஆராய உயர் அதிகாரக் குழுவை நியமிக்கப் போவதாகப் பீற்றிக் கொண்டது. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் அந்த ஆலோசனையைத் தத்தெடுத்துக் கொண்டுள்ளது என்று கூறலாம். அந்த உயர் அதிகாரக் குழுவிற்குக் காலவரையறை எதுவும் நிர்ணயிக்க முடியாது என்றார், ஜெயா. உச்ச நீதிமன்றமோ தனது உத்தரவின் கீழ் அமைக்கப்படும் கமிட்டிக்கு இரண்டு வாரக் கெடு விதித்திருக்கிறது. இதனைத் தவிர, அவாளுக்கும் இவாளுக்கும் இடையே வேறெந்த வேறுபாடும் இல்லை.

அதேசமயம், சமச்சீர் கல்விக்குத் தான் எதிராக இல்லை எனக் காட்டிக் கொள்வதற்காக, ''இந்தக் குழு பாடத்திட்டத்தை மாற்றுவது குறித்தெல்லாம் ஆராயத் தேவையில்லை; சென்னை உயர் நீதிமன்றம் சமச்சீர் கல்விச் சட்டத்தை அங்கீகரித்து ஏப்ரல் 2010 - இல் அளித்த தீர்ப்பில் கூறிய வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்ந்து சொல்ல வேண்டும்'' என உச்ச நீதிமன்றம் உபதேசித்துள்ளது. ஆனால், இவை வெற்று வார்த்தைகள் என்பதை உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலுக்கு ஏற்ப தமிழக அரசு அமைத்துள்ள குழுவில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களின் தரமும், தன்மையுமே அம்பலப்படுத்திவிட்டது.

சென்னையைச் சேர்ந்த பெரும் கல்வி வியாபார நிறுவனமான லேடி ஆண்டாள் மெட்ரிகுலேஷன் பள்ளியின் முன்னாள் முதல்வர் விஜயலட்சுமி சீனிவாசன், சென்னையில் மேல்சாதி - மேட்டுக்குடி கும்பலைச் சேர்ந்த வாரிசுகள் பயிலும் கோபாலபுரம் டி.ஏ.வி. பள்ளிகள் குழுமத்தின் முதலாளி சி.ஜெயதேவ் மற்றும் சென்னையைச் சேர்ந்த மற்றொரு மேட்டுக்குடி பள்ளியான பத்மா சேஷாத்ரி பாலபவன் பள்ளிகள் குழுமத்தின் முதல்வரும் இயக்குநருமான



படிப்பகம்

www.padippakam.com

திருமதி ஒய்.ஜி.பார்த்தசாரதி ஆகிய மூன்று கல்வி வியாபாரிகளையும் கல்வியாளர்கள் என்ற போர்வையில் இந்தக் குழுவில் இடம் பெறச் செய்ததன் மூலம், சமச்சீர் கல்வித் திட்டத்தைச் சிதைத்து ஒழித்துக் கட்டுவது தான் தனது நோக்கம் என்பதை ஜெயா கும்பல் மீண்டும் உறுதிப்படுத்திவிட்டது.

ஒன்று மற்றும் ஆறாம் வகுப்புகளைத் தவிர, மற்ற வகுப்புகளுக்கான பொதுப் பாடத்திட்டத்தையும் பொதுப் பாடநூல்களையும் இருவார காலத்திற்குள் ஆய்வு செய்ய வேண்டும் என்ற உத்தரவே, முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட ஜெயா அரசின் முடிவுப் படிதான் இக்குழு அறிக்கை தயாரித்து அளிக்குமோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாகத்தான் உள்ளது. மேலும், இந்தக் குழுவின் அறிமுகக்கூட்டத்திலேயே, பொதுப் பாடநூல்களை ஆய்வுக்கு உட்படுத்துவதற்கு முன்பாகவே, அந்நூல்கள் தரமற்ற முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது என விவாதம் நடந்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இவையனைத்தும் இக்குழு ஜெயாவின் தலையாட்டி பொம்மையாகச் செயல்படும் வாய்ப்பிருப்பதைத்தான் எடுத்துக்காட்டுகின்றன.

இதுவொருபுறமிருக்க, பார்ப்பன பாசிச ஜெயா கும்பல் சமச்சீர் கல்வித் திட்டத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் விதமாகப் பல சதி வேலைகளையும் செய்து வருகிறது. உச்ச நீதிமன்றம் தற்பொழுது அளித்துள்ள தீர்ப்பின்படி பழைய பாடத் திட்ட அடிப்படையில் அமைந்த நூல்களைத் தமிழக அரசு அச்சடிக்கக் கூடாது. ஆனால் அ.தி.மு.க. அரசு, ஒன்று மற்றும் ஆறாம் வகுப்புகளுக்குப் பொதுப் பாடத் திட்டத்தைத் தொடர வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும், அவ்வகுப்புகளுக்கான பழைய பாட நூல்களோடு, மற்ற வகுப்புகளுக்கான பழைய பாடநூல்களையும் அச்சடித்து வருகிறது.

தி.மு.க. தலைவர் மு.க. மற்றும் அவரது மகள் கனிமொழியின் புகழ்பாடும் பகுதிகளை நீக்குவது என்ற பெயரில், ஒன்று மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கான பொதுப் பாடநூல்களைச் சிதைத்து வருகிறது, அ.தி.மு.க. அரசு. குறிப்பாக, முதல் வகுப்பு தமிழ்ப் பாட நூலில் உள்ள பாரதிதாசனின் புதிய ஆத்திச்சூடி உள்ளிட்டு, இப்பொதுப் பாடத் திட்ட நூல்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பெரியார், அம்பேத்கார் பற்றிய குறிப்புகளையும், அவர்களின் சீர்திருத்தக் கருத்துகளையும் நீக்கிவிட்டது; சூரிய கிரகணத்தைப் பற்றியும், இரவு - பகல் பற்றியும் விளக்குவதற்காகப் போடப்பட்டுள்ள சூரியனின் படங்களைக்கூட, தி.மு.க.வின் சின்னமாக முத்திரை குத்தி, அப்பக்கங்களைக் கிழிக்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளது; அறிவியல் பாடத்தில் சட்ட காந்தம் பற்றி விளக்குவதற்காகப் போடப்பட்டுள்ள சட்ட காந்த படம் கறுப்பு - சிவப்பு வண்ணத்தில் இருப்பதால், அது தி.மு.க.வின் கொடியைக் குறிப்பதாகக் கருதி நீக்கியுள்ளனர்; ஆனால், சட்ட காந்தம் கறுப்பு - சிவப்பு வண்ணத்தில் தான் இருக்கும் எனப் பள்ளி ஆசிரியர்களும் கல்வியாளர்களும் சுட்டிக் காட்டுகின்றனர். மேலும், சமச்சீர் கல்வித் திட்டம் பற்றியோ, பொதுப் பாடத் திட்டங்கள் பற்றியோ ஆசிரியர்கள் யாரும் வாய்திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசக் கூடாது என்றும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தி.மு.க. அரசு நடத்திய செம்மொழி மாநாடு இலச்சினையை, ஜெயாவிற்கு ராசியான பச்சை வண்ணம் கொண்ட ஸ்டிக்கரால் மூடி மறைத்துவிட்டு, விநியோகிக்கப்பட்டுள்ள +1 வகுப்புக்கான பாடநூல்களைக் காட்டும் மாணவிகள்.



பாடத் திட்டமும், பாடநூல்களும் இன்றி பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. ஆனாலும், பள்ளிகள் ஆக்கபூர்வமாகச் செயல்படுகின்றன எனக் காட்டுவதற்காகவே, செயல்முறை விளக்க வகுப்புகள் நடத்தப்படும் என அறிவித்திருக்கிறது, அ.தி.மு.க. அரசு. வங்கிகளுக்கும், ரயில் நிலையங்களுக்கும் மாணவர்களை அழைத்துச் சென்றுக் காட்டுவதைப் படம் பிடித்துப் போட்டு, பள்ளிகள் சுமுகமாகச் செயல்படுவதைப் போல அரசும் பத்திரிகைகளும் காட்டி வருகின்றன.

ஒருபுறம் சமச்சீர் கல்வித் திட்டத்தை ஒழிக்கும் நோக்கத்தோடு செயல்பட்டு வரும் ஜெயா கும்பல், இன்னொருபுறமோ தனியார் பள்ளி முதலாளிகள் கட்டணக் கொள்ளையடிப்பதை வேடிக்கை பார்த்து வருகிறது. சமச்சீர் கல்வித் திட்டத்தை



படிப்பகம்

www.padippakam.com

நிறுத்தி வைத்த கையோடு, கல்விக் கட்டண நிர்ணயம் செய்வதற்கும் அரசுக்கும் சம்பந்தம் கிடையாது என அறிவித்து, இக்கொள்ளைக்குப் பச்சைக் கொடி காட்டியவர்தான் ஜெயா.



வங்கியின் செயல்பாடுகளைக் கற்றுத் தருவதற்காக, கோவை சென்ட்ரல் வங்கிக்கு அழைத்து வரப்பட்ட பிரசன்டேஷன் கான்வெண்ட் மாணவிகள். பாடத்திட்டம், பாடநூல்கள் இல்லாவிட்டாலும்,பள்ளிகள் சுமுகமாக இயங்குவதைப் போலக் காட்டும் பித்தலாட்டம்.

கல்விக் கட்டணத்தை உயர்த்தி நிர்ணயிக்க வேண்டும் என விண்ணப்பித்த 6,400 தனியார் பள்ளிகளுக்கும் எவ்விதக் குறையுமின்றிதான் கட்டணத்தை உயர்த்தி நிர்ணயித்திருக்கிறது, ரவிராஜ பாண்டியன் குழு. கல்விக் கட்டணம் போக, சீருடைக்கான கட்டணம், நோட்டு மற்றும் பாட நூல்களுக்கான கட்டணம், பள்ளிப் பேருந்துக் கட்டணம் போன்றவற்றை பள்ளி முதலாளிகள் தமது விருப்பம் போல நிர்ணயித்துக் கொள்ளலாம் என அனுமதி வழங்கியிருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொண்டு, ''ஷுவிற்கு'' ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும், ஆங்கிலப் பேச்சுப் பயிற்சிக்குத் தனிக் கட்டணம் செலுத்த வேண்டும் என்றவாறு கொள்ளையடிக்கத் தொடங்கியுள்ளன, தனியார் பள்ளிகள்.

இக்கட்டணக் கொள்ளைக்கு எதிராகப் போராட முன்வரும் பெற்றோர்களை, ''பையனின் டி.சி.யைக் கொடுத்து அனுப்பிவிடுவோம்'' என மிரட்டிப் பணிய வைக்க முயலுகிறது, தனியார் பள்ளிக் கொள்ளைக் கும்பல். இதற்குப் பணியாத பெற்றோர்கள் போலீசாரால் மிரட்டப்படுகின்றனர். அதையும் மீறிப் போராடும் பெற்றோரின் குழந்தைகளை, அரசு நிர்ணயித்த கட்டணத்தை மட்டுமே கட்டும் பெற்றோர்களின் குழந்தைகளைத் தனி வகுப்புகளில் அமர வைத்தும், அம்மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம், சீருடை போன்றவற்றை வழங்காமலும், புதிய வகை தீண்டாமையை அம்மாணவர்கள் மீது ஏவிவிட்டு, அவர்களை அவமானப்படுத்தி மனரீதியாகச் சித்திரவதை செய்து வருகின்றனர், தனியார் பள்ளி முதலாளிகள்.

இக்கொள்ளை, இச்சித்திரவதைகள் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வெளியான பிறகும்கூட நடவடிக்கை எடுக்காமல், பெற்றோர்கள் புகார் கொடுத்தால்தான் நடவடிக்கை எடுக்க முடியும் எனத் தட்டிக் கழிக்க முயலுகிறது, தமிழக அரசு. பெற்றோர்கள் அதிகாரிகளிடம் புகார் கொடுக்கச் சென்றால், ஆதாரம் இருக்கிறதா எனக் கேட்டு அவர்கள் மிரட்டப்படுகிறார்கள். ஆதாரங்களைக் கொடுத்தால், ஏதோ சில பள்ளிகளுக்கு மட்டுமே எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பி வைக்கப்படுகிறது. அப்பள்ளிகள் இந்த நோட்டீஸைக் கழிப்பறை காகிதம் அளவிற்குக்கூட மதிப்பதில்லை.

அரசு பாடத் திட்டத்தைவிடத் தங்களின் பாடத் திட்டத்தின் தரம் அதிகமானது என்று கூறித்தான் தனியார் பள்ளிகள் தங்களின் கட்டணக் கொள்ளையை நியாயப்படுத்துகின்றன. வேறுபட்ட பாடத் திட்டங்களும், வேறுபட்ட பாடநூல்களும் இருப்பதுதான் தரமானதென்றும், இதற்கு மாறாக, பொது பாடத்திட்டமும் பாடநூல்களும் அமலுக்கு வந்தால், கல்வியின் தரம் தாழ்ந்து போகும் என்றும் இவர்கள் வாதிடுகிறார்கள். தமிழக அரசின் பள்ளிக் கல்வியின் கீழுள்ள நான்குவிதமான பாடத் திட்டங்கள், வெவ்வேறுவிதமான பாட நூல்கள், தனித்தனிப் பொதுத் தேர்வுகள் என்பதற்குப் பதிலாக, பொது பாடத்திட்டம், பொதுப் பாடநூல்கள், பொதுத் தேர்வுமுறை அமலுக்கு வந்துவிட்டால், பள்ளிக் கல்வியின் தரம் எந்தவிதத்திலும் தாழ்ந்துவிடப் போவதில்லை. மாறாக, தனியார் பள்ளி முதலாளிகள் கட்டணக் கொள்ளையடிப்பதற்கான வழி அடைபட்டுப் போகும் என்பதுதான் உண்மை.

முத்துக்குமரன் கமிட்டியில் பொதுப் பாடத் திட்டத்தை உருவாக்குவது குறித்த விவாதம் நடந்த பொழுது, தரமான பொதுப் பாடத்திட்டத்தைத் தயாரித்து விவாதத்திற்கு வைக்கச் சொல்லி மெட்ரிக் பள்ளி நிர்வாகிகளை கோரியபொழுது, அவர்கள் தங்களின் சார்பில் பொதுப் பாடத்திட்டத்தை முன்வைக்க மறுத்துவிட்டதோடு, வேறுபட்ட பாடத்திட்டங்களும், பாடநூல்களும் இருக்க வேண்டும் எனப் பிடிவாதமாக வாதாடியதை அக்கமிட்டியில் உறுப்பினராக இருந்த கல்வியாளர் எஸ்.எஸ். ராஜகோபாலன் அம்பலப்படுத்தியிருக்கிறார். மாணவர்களுக்குத் தரமான கல்வி வழங்க வேண்டும் என்பது மட்டுமே மெட்ரிக்



படிப்பகம்

பள்ளி முதலாளிகளின் நோக்கமாக இருந்திருந்தால், அவர்களே தரமான பொதுப் பாடத்திட்டத்தைத் தயாரித்து வழங்கியிருக்கலாமே? அரசு பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் ஒரே விதமான பொதுப் பாடத்திட்டமும், பொதுப் பாடநூல்களும் போதிக்கப்பட்டால், தனியார் பள்ளிகளுக்கு அநியாயமான கல்வி கட்டணம் எதற்குச் செலுத்த வேண்டும் என்ற கேள்வி பெற்றோர்கள் மத்தியிலேயே எழுந்து, அவர்கள் தனியார் பள்ளிகளைப் புறக்கணிக்கவும் தொடங்குவார்கள்; பிறகு, தமது கல்வி வியாபாரம் படுத்துவிடும் என்பது தவிர, அவர்களின் பிடிவாதத்திற்கு வேறு காரணம் இருக்க முடியாது.



சென்னை-பெரம்பூரிலுள்ள கல்கி அரங்கநாதன் மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி நிர்வாகம் நடத்திவரும் கட்டணக் கொள்ளையைக் கண்டித்து, அப்பள்ளி வாயிலின் முன்பாக பெற்றோர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

இப்படிபட்ட நரித்தனம் நிறைந்த கல்வி வியாபாரிகள் கடந்த தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்ட பொதுப் பாடத் திட்டமும், பாட நூல்களும் தரமற்றது எனச் சாடுவதை ஒப்புக் கொண்டு, அதன்படி இப்பாடத் திட்டத்தையும், பாடநூல்களையும் ஆய்வு செய்ய ஒரு குழுவை நியமிக்க உத்தரவிட்டுள்ள உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எந்தவிதத்திலும் நியாயமானதாகக் கருதிவிட முடியாது. தரம், தரம் என்ற பெயரில் பொது பாடத்திட்டத்தையும், பொது பாடநூல்களையும் சிதைக்க அனுமதித்து, தனியார் கல்வி வியாபாரிகளின் கட்டணக் கொள்ளைக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்கள், நீதிபதிகள்.

மெட்ரிக் பள்ளிகளின் கட்டணக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றால், பொது பாடத் திட்டத்தையும், பொதுப் பாடநூல்களையும் அமலாக்கக் கோரிப் போராட வேண்டும் என்பது முன்னைக் காட்டிலும் இப்பொழுது தெளிவாகிவிட்டது. இந்த இரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்துப் போராடுவதற்கு ஏற்றவாறு பெற்றோர் - மாணவர் சங்கங்களை அமைப்பதும், வழிகாட்டுவதும்தான் புரட்சிகர, ஜனநாயக சக்திகளின் முன்னுள்ள கடமையாகும்.

● செல்வம்

## டீசல்-எரிவாயு உருளை விலையேற்றம்:


# தாராளமயத்தின் கோரவிளைவு!




கடந்த ஜூன் 24-ஆம் தேதி நள்ளிரவிலிருந்து சமையல் எரிவாயு சிலிண்டருக்கு 50 ரூபாய், டீசல் விலை லிட்டருக்கு 3 ரூபாய், மண்ணெண்ணெய் லிட்டருக்கு 2 ரூபாய் - என விலையேற்றத்தை அறிவித்து நாட்டு மக்களின் மீது மீண்டும் பொருளாதாரச் சுமையைத் திணித்துள்ளது. சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை அதிகரிப்பு, பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் சந்தை விலைக்குக் குறைவாக பெட்ரோலியப் பொருட்களை விற்பதால் ஏற்படும் நட்டம், சமையல் எரிவாயு முதலானவற்றுக்கு அரசு அளிக்கும் மானியத்தால் ஏற்படும் நிதிப் பற்றாக்குறை - என்ற வழக்கமான பொய்களைக் கூறி விலையேற்றத்தை நியாயப்படுத்தி வருகிறது.

இப்பொருளாதாரத் தாக்குதலுக்கு எதிராக, ஓசூரில் இயங்கிவரும் பு.ஜ.தொ.மு., தோழமை அமைப்பான வி.வி.மு.வுடன் இணைந்து 25.6.2011 அன்று ஓசூர் ராம்நகர் அருகில் திரளான உழைக்கும் மக்கள் பங்கேற்புடன் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இந்த விலையேற்றம் என்பது பன்னாட்டு மற்றும் உள்நாட்டு கார்ப்பரேட் முதலாளிகளின் கொள்ளை இலாப வேட்டைக்காக நடைமுறைப்படுத்தப்படும் தனியார்மய-தாராளமயத்தின் கொடிய விளைவுதான் என்பதை உணர்த்தி, விண்ணதிரும் முழக்கங்களுடன் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டம் மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

-பு.ஜ.செய்தியாளர், ஓசூர்.




# சமச்சீர் கல்வி: 'மார்க்சிஸ்டு'களின் இரட்டை நாக்கு

**போ**லி கம்யூனிஸ்டுகளின் உறுதியான ஆதரவு இல்லாமல் பாசிஸ்டுகள் அதிகாரத்துக்கு வர இயலாது என்று உணர்த்தினார், பாசிச எதிர்ப்புப் போராளியும் அனைத்துலக கம்யூனிசத் தலைவர்களில் ஒருவருமான தோழர் ஜார்ஜ் டிமிட்ரோவ். அதற்கு இலக்கணப் பொருத்தமாகத் திகழ்கிறார்கள், தமிழகப் போலி கம்யூனிஸ்டுகள்.

சட்டமன்றத்தில் சமச்சீர் கல்வியை ஒழிப்பதற்கு ஜெயலலிதா கொண்டுவந்த மசோதாவை ஆதரித்துப் பேசிய மார்க்சிஸ்டு கட்சி உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன், ''இந்தச் சூழ்நிலையில் சமச்சீர் கல்வித் திட்டத்துக்கான திருத்த மசோதாவை பேரவையில் கொண்டு வந்திருப்பது வரவேற்கத்தக்கது'' என்று கூறி மசோதாவை விசுவாசமாக ஆதரித்தார். இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி எம்.எல்.ஏ. ஆறுமுகம், ''இந்த சட்ட முன்வடிவு சமூக நீதிக்கான சட்ட முன்வடிவாகும்'' என்று கூறி, மார்க்சிஸ்டுகளை விஞ்சிய விசுவாசத்தைக் காட்டினார்.

சமச்சீர் கல்விமுறையை மறுபரிசீலனை செய்ய உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என்றும், சமச்சீர் கல்வியை இந்த ஆண்டு நடைமுறைப்படுத்த இயலாது என்றும் இந்த மசோதாவில் கூறப்பட்டுள்ளது. குரல் வாக்கெடுப்பு மூலம் சமச்சீர் கல்வி சட்டத் திருத்த மசோதா சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு ஒத்தூதிய இரட்டை நாக்குப் பேர்வழிகளான மார்க்சிஸ்டுகள், கடந்த ஜூன் 7-ஆம் தேதியன்று தமது கட்சியைச் சேர்ந்த இந்திய மாணவர் சங்கம், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் ஆகிய அமைப்புகளின் சார்பில், சமச்சீர் கல்வியை இந்த ஆண்டே அமல்படுத்த வலியுறுத்தி, சென்னை மெமோரியல் ஹால் அருகில் ஆர்ப்பாட்டமும் நடத்தினர். கம்யூனிஸ்டுகள் என்றால் நேர்மையானவர்கள், உண்மையானவர்கள் என உழைக்கும் மக்களிடம் நிலவும் உயரிய மதிப்பையும் மரியாதையையும் சீர்குலைத்துவிட்டு, பாசிச ஜெயாவுக்கு சட்டமன்றத்தில் விசுவாசம்; மறுபுறம், மக்களின் அதிருப்திக்கு வடிகாலாக ஆர்ப்பாட்டம்; — இது சந்தர்ப்பவாதமா அல்லது புரட்சியா?

அதன்பின் 10-ஆம் தேதியன்று மசோதாவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. உடனே 11-ஆம் தேதியன்று மார்க்சிஸ்டு கட்சி செயலாளர் இராமகிருஷ்ணன் ஓர் அறிக்கை விடுகிறார்.

''சமச்சீர் கல்வியின் ஓர் அம்சமான பொதுப்பாடத் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டே, கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும், பாடப்புத்தகத்தில் உள்ள குறைபாடுகளைச் சரிசெய்வதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மார்க்சிஸ்டு கட்சியும் ஏற்கெனவே தமிழக அரசை வலியுறுத்தியிருந்தது. இதையே கல்வியாளர்களும் பல்வேறு அமைப்பினரும் வலியுறுத்துகின்றனர். எனவே, உயர் நீதிமன்றத் தீர்ப்பைக் கருத்தில் கொண்டு இந்த கல்வியாண்டிலேயே சமச்சீர் கல்வி பொதுப்பாடத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மார்க்சிஸ்டு கட்சி மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.''

பொதுப் பாடத்திட்டத்தை நிறுத்துவதற்கும் அச்சிட்ட நூல்களை முடக்குவதற்கும் எதிராக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்தைத்தான் மார்க்சிஸ்ட் கட்சி 'ஏற்கெனவே' வலியுறுத்தி வந்ததாம். மார்க்சிஸ்ட் கட்சி வலியுறுத்தும் இந்தக் கருத்தையே பல்வேறு அமைப்புகளும் வலியுறுத்துகிறார்களாம். ஏற்கெனவே வலியுறுத்தி வந்ததாகக் கூறிக்கொள்ளும் மார்க்சிஸ்ட் கட்சி, சட்டமன்றத்தில் சமச்சீர் கல்வி ஒழிப்பு மசோதாவை ஆதரிக்கக் காரணம் என்ன? அதற்கும் முந்தைய 'ஏற்கெனவே' என்றால், அது தி.மு.க. ஆட்சிக்காலம். அப்போது சமச்சீர் கல்விச் சட்டத்தை மார்க்சிஸ்டு கட்சி ஆதரித்தது. இவற்றில் எந்தப் பித்தலாட்ட 'ஏற்கெனவே' சரியானது?

அன்று, இந்திராகாந்தியின் அவசரநிலை பாசிசத்தையும் அவரது இருபது அம்சத் திட்டத்தையும் ஆதரித்த வலது கம்யூனிஸ்ட் கட்சி, பாசிச இந்திராவின் வளர்ப்புப் பிராணியாகி நின்றது. இன்று, சமச்சீர் கல்வித் திட்டத்தை ஒழிக்கக் கிளம்பியுள்ள பாசிச ஜெயா கும்பலுக்கு விசுவாசமாக நின்று, அப்பட்டமாக ஜெயலலிதாவின் அல்லக்கைகளாக மாறி நிற்கின்றனர், தமிழகப் போலி கம்யூனிஸ்டுகள்.

● தனபால்



படிப்பகம்

www.padippakam.com

## லோக்பால்:

# ஊழல் சாக்கடைக்கு ஞானஸ்நானம்

**தனியார்மய–தாராளமயத்தால் வாழ்விழந்த மக்களின் கோபத்தைத் தணிக்க அன்னா ஹசாரேவும் ராம்தேவும் ஆளும் வர்க்கங்களுக்குத் தேவைப்படுகிறார்கள்.**

நாளுக்கு ஒரு ஊழல் அம்பலமாகி நாறிக்கொண்டிருக்கின்ற 'நல்லவர்' மன்மோகன் சிங்கின் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, ஊழலை நாட்டை விட்டே விரட்டுவதற்கு லோக்பால் மசோதா தயாரித்துக் கொண்டிருக்கிறது. திருடன் கையில் சாவியை ஒப்படைப்பது என்று கூறக் கேட்டிருக்கிறோம். ஆனால், திருட்டைத் தண்டிப்பதற்கான சட்டங்களை இயற்றும் பொறுப்பை திருடர்கள் தாமே முன்வந்து ஏற்றிருக்கும் கேலிக்கூத்தை இப்போது பார்க்கிறோம்.

காமன்வெல்த் விளையாட்டு ஊழல், ஆதர்ஷ் ஊழல், அலைக்கற்றை ஊழல், இஸ்ரோ ஊழல், கிருஷ்ணா-கோதாவரி எண்ணெய்க் கிணறு ஊழல் என அடுத்தடுத்து ஊழல் குற்றச்சாட்டுகள் எழும்பிய வண்ணமிருக்கும் நேரத்தில், அன்னா ஹசாரேயும் ராம்தேவும் நடத்திய 'பிரைம் டைம் உண்ணாவிரதங்கள்' ஒரு விதத்தில் காங்கிரசு அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்தன என்பது உண்மைதான். ஆனால், ஹசாரே மற்றும் ராம்தேவின் ஊழல் ஒழிப்பு சண்டமாருதங்கள், குறிப்பான ஊழல் குற்றங்களையும் குற்றவாளிகளையும் பற்றிப் பேசாமல், ஊழல் ஒழிப்பு பற்றி பொதுவாக மட்டுமே பேசியதால், அவை 2ஜி முதல் கேஜி வரையிலான இமாலய ஊழல்களிலிருந்து காங்கிரசு அரசையும் கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தையும் தப்ப வைப்பதற்கே பயன்பட்டிருக்கின்றன.

ஆளும் வர்க்கங்களால் தூக்கிப் பிடிக்கப்படும் தேசத்தின்மீட்பர்கள்: காந்திக்குல்லாய் கிழவர் அன்னா ஹசாரேவும் காயகல்ப வியாபாரி ராம்தேவும்.



இந்த உண்ணாவிரதங்களை ஊழல் ஒழிப்புப் போரின் குருட்சேத்திரம் என்று கொண்டாடும் தினமணி, இவற்றின் குறியிலக்கு யார் என்பதைத் தனது தலையங்கத்தில் தெளிவாக எடுத்தியம்புகிறது. ''தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், அரசு ஊழியர்களும்.. .. பொதுஜனத்துக்கு துரோகமிழைக்கும் போது, இவர்களைக் கண்காணிக்கவும் விசாரிக்கவும் தண்டிக்கவும் ஒரு அமைப்பு தேவைப்படுகிறது... .. நீதித்துறை, தேர்தல் ஆணையம், மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் போன்ற அமைப்புகள் விழிப்புடன் செயல்படத்தொடங்கினால்.. ஏற்படும் மாற்றங்கள் எப்படி இருக்கும் என்பதை நாம் கடந்த சில ஆண்டுகளாகவே அனுபவத்தில் பார்த்து வருகிறோம்''

தினமணி, ஆங்கிலத் தொலைக்காட்சிகள், அன்னா ஹசாரே மற்றும் ராம்தேவுக்கு ஆதரவாக நாடெங்கும் எரிதழலேந்தி காமெராவுக்கு போஸ் கொடுத்த பாரத மாதாவின் தவப்புதல்வர்கள் போன்றோர் அனைவரின் கருத்துப்படி ஊழலின் பிறப்பிடம் மற்றும் இருப்பிடம் இலஞ்சம் வாங்குகின்ற அரசியல்வாதிகளும் அதிகாரிகளும்தான். இந்த அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு பத்து ரூபாய் கொடுத்து நூறு ரூபாய் ஆதாயம் அடைகின்ற பன்னாட்டு நிறுவனங்கள், தரகு முதலாளிகள், வர்த்தக சூதாடிகள், சினிமா நட்சத்திரங்கள், ரியல் எஸ்டேட் முதலைகள் ஆகியோரெல்லாம் இவர்களது பார்வையில் குற்றவாளிகள் இல்லை. மாறாக அவர்களெல்லாம் ஊழல் ஒழிப்புப் போராளிகள்.

உலக கோப்பை கிரிக்கெட் போட்டியின் 'கமான் இந்தியா' முழக்கம் ஓய்ந்து, தேசியப் பெருமிதத்தின் சூடு தணியுமுன்னரே, 'ஊழலுக்கு எதிராக இந்தியா' என்று தலைப்பிட்டு ஹசாரே மற்றும் ராம்தேவின் உண்ணாவிரதப் போட்டியை ஒளிபரப்பின தனியார் தொலைக்காட்சிகள். டில்லி ஜந்தர் மந்தரில் அன்னா ஹசாரே நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்துக்காக வசூலிக்கப்பட்ட தொகை 82.88 இலட்சம் ரூபாயாம். இதில் ஜின்டால், சுரிந்தர்பால் சிங், ராம்கி, துகால், எய்சர், எச்.டி.எப்.சி வங்கி முதலான தரகு முதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் அளித்த நன்கொடை 46.50 இலட்சம் ரூபாய் (டைம்ஸ் ஆப் இந்தியா, ஏப்ரல்,14).

காலாவதியாகிப்போன ஒரு காந்திக்குல்லாய் கிழவரையும், காவி உடை அணிந்த ஒரு காயகல்ப வியாபாரியையும் தேசத்தின் மீட்பர்களைப் போலச் சித்தரித்து



படிப்பகம்

www.padippakam.com

ஆளும் வர்க்கங்கள் தூக்கிப் பிடிக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஊழல் மலிந்து உளுத்துப் போன இந்த அமைப்பு முறை மீதும், போலீசு, நீதிமன்றம், அதிகார வர்க்கம், நாடாளுமன்றம் உள்ளிட்ட இந்த அரசமைப்பு மீதும் மக்களுடைய அவநம்பிக்கையைப் போக்குவதற்கும், இந்த அரசமைப்பு மக்களுக்கு சேவை செய்ய முடியும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவிப்பதற்கும் இவர்கள் தேவைப்படுகிறார்கள்.

தனியார்மய, தாராளமயக் கொள்கைகளின் விளைவாக தமது நிலம், நீர், சுற்றுச்சூழல், தொழில் அனைத்தையும் இழந்து கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் மறுக்கப்பட்டு, தமது வாழ்க்கை சீர்குலைக்கப்பட்டதற்கான காரணம் தெரியாமல் குமுறிக் கொண்டிருக்கும் மக்களுடைய கோபத்தைத் திசை திருப்புவதற்கு இவர்கள் தேவைப்படுகிறார்கள்.

அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் வாங்குகின்ற லஞ்சம்தான் தேசத்தின் தலையாய பிரச்சினை என்று சித்தரிப்பதன் மூலம் லஞ்சம் கொடுக்கின்ற முதலாளி வர்க்கம் பெறுகின்ற ஆதாயத்தை மறைப்பதற்கு இவர்கள் தேவைப்படுகிறார்கள். ஊழலின் பரிமாணத்தை ஆயிரம் கோடி, இலட்சம் கோடி என்று பல நூறு மடங்காக உயர்த்தியதே தனியார்மயக் கொள்கைதான் என்ற உண்மையை மறைத்து, தனியார்மயக் கொள்கைளை அமல்படுத்துவதே நாட்டின் முன்னேற்றத்துக்கான வழி என்று காட்டுவதற்கும் இவர்கள் தேவைப்படுகிறார்கள்.

கொள்ளை இலாபம் ஈட்டுவதற்காக பஞ்சமா பாதகங்களையும் செய்வதற்கு அஞ்சாத கார்ப்பரேட் முதலாளித்துவம்தான், தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக, யோக்கியனை அயோக்கியனாகவும், நப்பாசைக்காரனை பேராசைக்காரனாகவும் மாற்றி ஊழல்படுத்துகிறது. ஊழலின் ஊற்றுக்கண்ணே முதலாளித்துவம்தான் என்ற அடிப்படையான இந்த உண்மையை மறைத்து விட்டு, லஞ்சம் வாங்குகின்ற அதிகாரிகளும் அமைச்சர்களும்தான் டாடா, அம்பானி, ஜின்டால் போன்ற 'நீதிமான்களை' லஞ்சம் கொடுத்தாக வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளிவிட்டதைப் போன்றதொரு பித்தலாட்டத்தைப் பிரச்சாரம் செய்வதற்கு ஹசாரேயும் ராம்தேவும் ஆளும் வர்க்கத்துக்குத் தேவைப்படுகிறார்கள்.

மக்கள் தமது பொதுச்சொத்துக்களாகப் பேணிவந்த காடுகள், மலைகள், நீர்நிலைகள், மேய்ச்சல் நிலங்களையும், விவசாயிகளின் விளைநிலங்களையும் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் பறித்தெடுத்து, அவற்றை தரகு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் உடைமையாக்கும் பகற்கொள்ளையும், பொதுத்துறை நிறுவனங்களை தேதி வைத்துத் தனியார்மயமாக்கும் தீவட்டிக் கொள்ளையும் சட்டபூர்வமாகவே அமல்படுத்தப் படுகின்றன. மறுகாலனியாக்கத்தின் கீழ் தொடுக்கப்பட்டு வரும் இந்த சட்டபூர்வமான கொள்ளைதான் இந்திய மக்களுடைய வாழ்வைச் சூறையாடும் முதற்காரணம் என்பதை மூடி மறைத்து விட்டு, அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் அடிக்கின்ற சட்டவிரோதக் கொள்ளையான இலஞ்சம்தான் நாட்டின் முழுமுதற் பிரச்சினை என்று சித்தரித்துச் சாமியாடுவதால்தான் ஹசாரேவுக்கு எல்லா முதலாளித்துவ ஊடகங்களும் உடுக்கடிக்கின்றன.



அன்னா ஹசாரேவின் ஊழல் எதிர்ப்பு உண்ணாவிரதத்தை ஆதரித்து டெல்லி ஜந்தர்மந்தரில் நடுத்தர வர்க்கத்தினர் ஆர்ப்பாட்டம்.

ஹசாரே முன்வைக்கும் ஊழல் ஒழிப்பு, சிறந்த அரசாளுமை போன்ற முழக்கங்கள் புதிய தாராளவாதக் கொள்கையைத் திணித்து வரும் வல்லரசுகள் மற்றும் சர்வதேச நிதிநிறுவனங்களால் உலகம் முழுவதிலும் முன்தள்ளப்படுபவைதான். அவ்வகையில் சிறந்த அரசாளுமைக்கு எடுத்துக் காட்டாகவும், முன் உதாரணமாகவும் இந்தியத் தரகு முதலாளிகள் யாரைக் கருதுகிறார்களோ, அந்த நரேந்திர மோடியைத்தான் ஹசாரேவும் முன்மாதிரியாக காட்டுகிறார். லோக்பால் மசோதா தொடர்பான விவாதத்தில் மத்திய அரசுடன் முரண்பட்டபோதிலும், காங்கிரசு கட்சிக்கும் அதன் ஊழல்களுக்கும் அப்பாற்பட்ட புனிதத் திரு உருவாக மன்மோகன் சிங்கை சித்தரிப்பதற்கும் ஹசாரே தவறவில்லை.

ஊழல் குற்றச்சாட்டுகளால் காங்கிரசு அரசும், அதிகார வர்க்கமும், பொதுவில் எல்லா ஓட்டுக் கட்சிகளும் மதிப்பிழந்து போயிருக்கும் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு ஊழலுக்கு எதிரான மக்கள் கோபத்தின் பிரதிநிதியாகத் தன்னைச் சித்தரித்துக் கொள்வதன் மூலம், இந்த அரசமைப்புக்கு அப்பாற்பட்ட ஒரு அதிகார மையமாகவும் அவர் நடந்து கொள்கிறார். பன்னாட்டு நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், அவர்களுக்கு வாரி வழங்கப்படும் சலுகைகளும் சட்டமன்ற, நாடாளுமன்றங்களுக்கே தெரியாமல் மறைக்கப்படும் இன்றைய சூழலில், தேர்ந்தெடுக்கப்படாத இந்த 'மக்கள் பிரதிநிதி'யை, ஊழல் தடுப்பு மசோதாவைத் தயாரிக்கும் நடவடிக்கையில் பங்கேற்க காங்கிரசு அரசு அனுமதிக்கிறதென்றால் அதற்குக் காரணம் இல்லாமலில்லை.



படிப்பகம்

www.padippakam.com

'வேர்மட்ட ஜனநாயகம்' என்ற பெயரில் அரசு நிர்வாகத்தில் அரசு சாரா நிறுவனங்கள் அங்கம் வகிப்பதும், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களை அவர்கள் கீழிருந்து சோதித்தறிவதும் மறுகாலனியாக்கத்தின் அங்கமாக இருப்பதால், ஹசாரே போன்றோரின் பங்கேற்பை மன்மோகன்சிங் அரசு கொள்கை பூர்வமாகவே அங்கீகரிக்கிறது. திரும்பிய பக்கமெல்லாம் தங்களது திருட்டுத்தனம் அம்பலப்பட்டு திக்குமுக்காடி நிற்கும் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு தலைதூக்க முடியாமல் பாரதிய ஜனதாவை ஓரங்கட்டுவதற்கு ஹசாரே பயன்படுகிறார் என்பதனாலும் அவரை காங்கிரசு அனுமதிக்கிறது.

அலைக்கற்றை ஊழல் உள்ளிட்ட வழக்குகளில், மத்திய புலனாய்வு நிறுவனத்தை தனது அரசியல் நோக்கங்களுக்கேற்ப காங்கிரசு அரசு பயன்படுத்தி வந்த போதிலும், இத்தகைய நிறுவனங்களைக் கொண்டே ஊழலை ஒழித்து விட முடியும் என்ற பிரமையை எதிர்தரப்பில் நின்று கொண்டு ஹசாரே உருவாக்குவதால், அவருடைய பங்கேற்பு தங்களது மோசடியை மறைக்கப்பயன்படும் என்ற காரணத்தினாலும் அவருடைய பங்கேற்பை காங்கிரசு பயன்படுத்திக் கொள்கிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்தை ஊழல்படுத்தி அதில் பிழைப்புவாதிகளை உருவாக்கிச் சீர்குலைப்பதற்காக பிரட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் தாங்களே முன்வந்து அறிமுகப்படுத்தியது தான் நமது நாட்டின் நாடாளுமன்ற ஜனநாயகம். இந்த ஜனநாயகத்தின் ஆன்மாவான ஊழலை, நாடாளுமன்றத்தின் துணை கொண்டே ஒழித்துக் கட்டப்போவதாகக் கதையளக்கிறார் ஹசாரே. அத்தகையதொரு ஜனநாயகப் படுகொலையை நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுமதிப்பார்களா என்ன?

● சூரியன்

## போஸ்கோ எதிர்ப்புப் போராட்டம்:

# திணறிப் போனது ஆளும் கும்பல்!

தென்கொரியாவைச் சேர்ந்த தேசங்கடந்த தொழிற்கழகமான போஸ்கோ, ஒரிசாவின் ஜகத்சிங்பூர் மாவட்டத்தில் ஏறத்தாழ 4,000 ஏக்கர் பரப்பளவில், 55,000 கோடி ரூபாய் மூலதனத்தில், இரும்பு உருக்காலை - துறைமுகம் - மின் உற்பத்தி நிலையம் ஆகிய மூன்றையும் ஒருசேர அமைப்பதற்கு, மைய அரசின் சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம் தனது இறுதிக் கட்ட அனுமதியை வழங்கிவிட்டது. போஸ்கோவின் திட்டத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் வனப்பகுதி முற்றிலும் அழிந்து போகும், அவ்வனத்தை நம்பி வாழ்ந்துவரும் 20,000-க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்களின், இதர விவசாயிகளின் வாழ்க்கை நாசமாகிவிடும் என்பதையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, வன உரிமைச் சட்ட விதிகளை வளைத்தும், மீறியும் தான் இந்தச் சுற்றுப்புறச்சூழல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இத்திட்டத்திற்காகப் பழங்குடியின மக்களின், இதர விவசாயிகளின் நிலங்களை அபகரிக்கும் நடவடிக்கைகளை மீண்டும் தீவிரப்படுத்தியிருக்கிறது, ஒரிசா மாநில அரசு. போஸ்கோவின் இரும்புச் சுரங்கமும், உருக்காலையும் அமையவுள்ள திங்கியா, கடகுஜங், கோவிந்தபூர், நுவாகான் ஆகிய கிராமங்களை, ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆயுதந் தாங்கிய போலீசார் சுற்றிவளைத்து முற்றுகையிட்டுள்ளனர். இன்னொருபுறம், ஏற்கெனவே அபகரிக்கப்பட்டுள்ள நிலத்தில், ஆலைக்காகச் சுற்றுச்சுவரைக் கட்டும் வேலையைத் தொடங்கிவிட்டது, ஒரிசா மாநில அரசு.

கடந்த ஜூன் 2 அன்று ஆயுதந் தாங்கிய போலீசாரின் துணையோடு கடகுஜங் கிராமத்திற்குள் நுழைந்த மாவட்ட அதிகாரிகள், அக்கிராமத்திலுள்ள விளைநிலங்களைக் கைப்பற்றுவதற்காக வெற்

அரசு அதிகாரிகளும் போலீசும் நிலத்தைக் கையகப்படுத்த தமது கிராமத்திற்குள் நுழைவதைத் தடுத்து நிறுத்த, மூன்று அடுக்கு மனிதச் சங்கிலியை அமைத்துப் போராடும் கோவிந்தபூர் கிராம மக்கள்.





படிப்பகம்

www.padippakam.com

றிலைத் தோட்டங்களை அழிக்கத் தொடங்கினர். இதனை எதிர்த்து நின்ற அக்கிராம ஊராட்சி துணைத் தலைவர் உள்ளிட்டு 17 விவசாயிகள் போலீசாரால் தாக்கப்பட்டு, பொய் வழக்கு போடப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். இச்சம்பவத்தையடுத்து, போஸ்கோ பிரதிரோத் சங்க்ராம் சமிதி என்ற அமைப்பின் கீழ் திரண்டு இத்திட்டத்திற்கு எதிராகப் போராடி வரும் விவசாயிகளும் பழங்குடியின மக்களும், போலீசாரும் அதிகாரிகளும் கிராமத்திற்குள் நுழைய முடியாதபடி தடுப்பதற்காக, தமது கிராமங்களைச் சுற்றி மூன்றடுக்கு மனித அரண்களை அமைத்தனர். முதல் அடுக்கில் குழந்தைகளும், அடுத்த அடுக்கில் பெண்களும், மூன்றாவது அடுக்கில் ஆண்களும் நின்று, தமது கிராமங்களையும், விளைநிலங்களையும் மாநில அரசு அபகரித்துக் கொள்வதற்கு எதிராகப் போராடி வருகின்றனர்.



கொளுத்தும் வெயிலில், சுடுமணலில் படுத்தபடி, நடத்திய எழுச்சிமிகு போராட்டம். போராட்டக்காரர்களின் உடம்பில் ஏறும் சூடு தண்ணீர் பீய்ச்சியடிக்கப்பட்டுத் தணிக்கப்படுகிறது.

இம்மனித அரணை உடைத்துக் கொண்டு நுழைய முடியாத அதிகாரிகளும், போலீசாரும் வேறொரு குறுக்கு வழியில் கோவிந்தபூர் கிராமத்திற்குள் நுழைந்து வெற்றிலைத் தோட்டங்களை அழிக்க முயற்சித்தனர். கிராம மக்கள் இதனை முறியடிக்கும் விதமாக, போஸ்கோ ஆலை அமையவுள்ள நிலமெங்கிலும் படுத்தபடியே போராடத் தொடங்கினர். அதிகாரிகளும், போலீசாரும் தங்களை ஏறி மிதித்துக் கொண்டுதான் செல்ல முடியும் என்ற இக்கட்டான நிலையை உருவாக்கினர். சுட்டெரிக்கும் வெயிலில், அனலாகக் கொதிக்கும் மணலில் படுத்தபடி, குழந்தைகளும், பெண்களும், ஆண்களும் இணைந்து ஐந்து மணி நேரத்திற்கும் மேலாகப் போராடினர். கிராம மக்களின் உறுதி குலையாத இப்போராட்டத்தை முறியடிக்க முடியாமல் திணறிப் போன போலீசும், அதிகார வர்க்கமும் தோட்டங்களை அழிப்பதைக் கைவிட்டுத் திரும்பிப் போயின.

குழந்தைகள் போராட்டத்தில் ஈடுபடுத்தப்படுவதைக் கண்டித்து முதலைக் கண்ணீர் வடித்தது, ஒரிசா மாநில அரசு. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிறுவர்கள், ‘‘பெற்றோரின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் பொழுது தங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க யாரும் இல்லை; பெற்றோரைத் தவிர, மாநில அரசினாலோ, போஸ்கோ நிறுவனத்தாலோ தங்களுக்குச் சிறப்பான எதிர்காலத்தைத் தரமுடியாது’’ எனப் பதிலடி கொடுத்தனர். அப்போராட்டக் களமே சிறுவர்களுக்கான வகுப்பறையாகவும் மாற்றப்பட்டது.

ஜூன் 27 அன்று நுவாகான் கிராம பஞ்சாயத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும், கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் சுற்றுச்சுவர் கட்டப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்காக போலாங்க் கிராமத்திற்குச் சென்றிருந்தபொழுது, அக்கிராம பஞ்சாயத்துக்கு உட்பட்ட பாலிஸாஹி என்ற கிராமத்திற்குள் நுழைந்து, 1,000-க்கும் மேற்பட்ட மரங்களை வெட்டிச் சாய்த்து, அக்கிராம நிலங்களைக் கையகப்படுத்த முனைந்தது மாவட்ட நிர்வாகம். மாவட்ட நிர்வாகத்தின் இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்த கோவிந்தபூர் கிராம மக்கள் திரண்டு வருவதைத் தடுப்பதற்காக, ஆயிரக்கணக்கான போலீசாரைக் கொண்டு அக்கிராமம் சுற்றி வளைக்கப்பட்டது.

மூன்றடுக்கு மனிதச் சங்கிலி போராட்டத்தின் பொழுது முன்னணியில் நின்ற சிறுவர்களுக்குப் போராட்டக் களமே பள்ளிக்கூடமாக மாற்றப்பட்டு, பாடம் நடத்தப்படும் அற்புதக் காட்சி!



தங்கள் கிராமத்திற்குள் போலீசும் அதிகாரிகளும் புகுந்து, மரங்களை



படிப்பகம்

www.padippakam.com

வெட்டுவதைக் கேள்விப்பட்ட நுவாகான் கிராம மக்கள் திரும்பி வந்து, விளக்குமாறையே ஆயுத மாகப் பயன்படுத்தி, போலீ சையும் அதிகாரிகளையும் துரத்தி யடித்தனர். மாவட்ட போலீசு கண்காணிப்பாளரையும், மாவட்டக் கூடுதல் நீதிபதி யையும் சிறைபிடித்துக் கொண்ட அக்கிராம மக்கள், இனி நிலம் கையகப்படுத்துவதற்காக கிராமத் திற்குள் நுழையக்கூடாது என எச்ச ரித்துத் திருப்பி அனுப்பி வைத் தனர். கோவிந்தபூரை முற்றுகை யிட்டிருந்த போலீசாருக்கு அந்த இரண்டு உயர் அதிகாரிகளும் சிறைபிடிக்கப்பட்ட செய்தி தெரிந்தவுடன், அம்முற்றுகை யைத் தாமே விலக்கிக் கொண்டு, பாசறைக்குத் திரும் பினர்.



போஸ்கோவிற்காக வனப் பகுதியும், விளை நிலங்களும் ஒரிசா மாநில அரசால் அபகரிக்கப்படுவதைக் கண்டித்து, அம்மாநிலத் தலைநகர் புவனேஷ்வரில் நடந்த ஊர்வலம்.

போஸ்கோ நிறுவனத்துடன் ஒரிசா மாநில அரசு 2005 -ஆம் ஆண்டு போட்டுக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந் தம் கடந்த ஆண்டே காலாவதியாகிப் போய்விட்டது. அவ்வொப்பந்தம் காலாவதியாகிப் போனாலும், அக் கார்ப்பரேட் நிறுவனத்திற்காக நிலம் கையகப்படுத்து வதை மட்டும் ஒரிசா மாநில அரசு நிறுத்தவேயில்லை. அந்தளவிற்கு ஒரிசா மாநிலத்தை ஆளும் பிஜூ ஜனதா தள அரசு, கார்ப்பரேட் கொள்ளைக் கும்பலின் விசுவாச நாயாகச் செயல்படுகிறது. பா.ஜ.க., போலி கம்யூ னிஸ்டுகள் உள்ளிட்ட இதரக் கட்சிகளோ, மக்களின் சம்மதமின்றி நிலங்களைக் கையகப்படுத்தக் கூடாது எனக் கூறி, நயவஞ்சகமான முறையில் போஸ்கோ விற்குப் பல்லக்குத் தூக்குகின்றன.

குளிரூட்டப்பட்ட பந்தலில் இந்து மத சாமியார் ராம்தேவ் நடத்திய உண்ணாவிரத நாடகத்தைப் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளிய, 24 மணி நேரமும் ஒளிபரப் பிய முதலாளித்துவ ஊடகங்கள், கொளுத்தும் வெயிலில், சுடுமணலில் படுத்தபடி போஸ்கோவிற்கு எதிராக ஒரிசா மாநில விவசாயிகள் நடத்திய போராட் டத்தைக் கண்டு கொள்ளவில்லை. அன்னா ஹசா ரேவும் ராம்தேவும் ஊழலையும், கருப்புப் பணத் தையும் எதிர்த்து நடத்தும் உண்ணாவிரத ''ஷோ''க் களை, இரண்டாவது சுதந்திரப் போராட்டமாக ஊதிப் பெருக்கி வருகின்றனர். கார்ப்பரேட் முதலாளிகளுக்கு எதிராகவோ, அவர்கள் நடத்திவரும் பகற் கொள்ளைக்கு எதிராகவோ ஒரு வார்த்தைகூடப் பேச மறுக்கும் இக்கும்பலுக்கு, சுதந்திரப் போராட்டம் என்ற வார்த்தையை உச்சரிப்பதற்குக்கூட எந்தத் தகுதியும் கிடையாது.

மாறாக, ஒரிசா மாநிலத்தின் ஜகத்சிங்பூர் மாவட் டத்தைச் சேர்ந்த பழங்குடியின மக்களும், விவசாயி களும் போஸ்கோவிற்கு எதிராக, கடந்த ஐந்தாண்டு களாகப் பல்வேறு அடக்குமுறைகளை எதிர்கொண்டு நடத்தி வரும் இப்போராட்டத்தை இரண்டாவது சுதந்திரப் போராட்டமாகக் கூறலாம். ஏனென்றால், இவ்விவசாயிகளும் பழங்குடியின மக்களும் தமது சொந்த நிலத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டும் இப்போராட்டத்தை நடத்தவில்லை. போஸ்கோ, ஒரிசாவின் இரும்புக் கனிம வளத்தைக் கொள்ளையடித்துச் செல்ல முயலுவதற்கு எதிரான போராட்டமாகவும் இது நடந்து வருகிறது.

தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில், வளர்ச்சி என்ற பெயரில் திணிக்கப்படும் கார்ப்பரேட் பகற்கொள்ளைக்கு எதிரான போராட்டக் களமாக இன்று ஒரிசா உள்ளது. ஒரிசா மாநில அரசு கடந்த எட்டு ஆண்டுகளுக்குள் 8 இலட்சம் கோடி ரூபாய் பெறுமான 184 தொழிற் திட்டங்களுக்கு அனுமதி அளித்திருக் கிறது. இத்திட்டங்களை அமலுக்குக் கொண்டுவர ஏறத்தாழ 50,000 ஏக்கருக்கும் மேல் நிலம் தேவைப் படும். எனினும், நியம்கிரி, கலிங்கா நகர், திங்கியா, கந்தாதர், காசிபூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பழங்கு டியின மக்களும் விவசாயிகளும் போஸ்கோ, டாடா, வேதாந்தா, ஜிந்தால் போன்ற கார்ப்பரேட் நிறுவனங் களுக்காக நிலம் கையகப்படுத்துவதற்கு எதிராகப் போராடி வருகின்றனர். இதனால், திட்டமிட்டபடி எந் தவொரு பெரிய தொழிற்திட்டமும் அம்மாநிலத்தில் இன்றுவரை நடைமுறைக்கு வரவில்லை. அந்த வகை யில் நாட்டின் பின்தங்கிய மாநிலமாகக் கூறப்படும் ஒரிசா, தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்த்து விடாப்பிடியாகவும், போர்க்குணத்தோடும், தியாகத் துக்கு அஞ்சாமலும் போராடுவதற்கு இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்குவதை மறுக்க முடியாது. அதே சமயம், சிதறுண்ட முறையில் தன்னெழுச்சியாக நடந்துவரும் இப்போராட்டங்களை ஒருங்கிணைத்து, மறுகாலனிய ஆதிக்கத்துக்கு எதிரான அரசியல் போராட்டமாக, ஆயுதந் தாங்கிய விடுதலைப் போராட் டமாக வளர்த்தெடுக்க வேண்டிய கடமை புரட்சி யாளர்களின் முன் இருப்பதையும் மறுக்கவியலாது.

● குப்பன்



படிப்பகம்




**எ**ண்டோசல்பான் என்ற பூச்சிக் கொல்லி மருந்துக்கு எதிராக கேரளாவில் மக்கள் போராட்டங்கள் வலுப்பெற்றதைத் தொடர்ந்து, இக்கொலைகார பூச்சி மருந்துக்கு எதிராக அண்மைக்காலமாக நாடு முழுவதும் கடும் எதிர்ப்பும் விவசாயிகள் மற்றும் சுற்றுச்சூழலாளர்களின் போராட்டங்களும் பெருகி வருகின்றன. அதைத் தொடர்ந்து, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமையிலான குழுவின் முடிவுக்குப் பின்னரே முழுமையான தடை விதிக்கப்படும் என்று அறிவித்து, எட்டு வாரங்களுக்கு தற்காலிகத் தடை எனும் கண்துடைப்பு நாடகமாடியது, உச்ச நீதிமன்றம்.

அண்டை மாநிலமான கேரளத்தில் முந்தைய போலி கம்யூனிஸ்டு ஆட்சி அந்தப் பூச்சி மருந்தைத் தடை செய்து, அதை உற்பத்தி செய்யும் ஹெச்.ஐ.எல். ஆலையையும் மூடியுள்ளது. ஆனால், மே.வங்கத்தில் முந்தைய போலி கம்யூனிஸ்டு ஆட்சி இப்பூச்சி மருந்தைத் தடைசெய்ய முன்வரவில்லை. பா.ஜ.க. ஆளும் கர்நாடகத்தில் விவசாயிகளின் எதிர்ப்பால் எண்டோசல்பான் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், குஜராத்தின் மோடி அரசு வெளிப்படையாகவே தடையை எதிர்த்து நிற்கிறது. தமிழகத்தில் முந்தைய கருணாநிதி அரசோ ஒரு நிபுணர் குழுவை நியமித்து ஆராயப் போவதாக அறிவித்தது.

தாயை மட்டுமின்றி, தாய்ப்பாலையும் நஞ்சாக்கித் தலைமுறை தலைமுறையாகக் கொடிய பாதிப்பை ஏற்படுத்துவதால், பிறக்கும் குழந்தைகள் வளர்ச்சியின்றி நடைபிணமாகி வருவதால், ஏற்கெனவே 81 நாடுகள் இப்பூச்சிக் கொல்லி மருந்தைத் தடை செய்துள்ளன. இருப்பினும், ரூ.1000 கோடி அளவுக்கு வர்த்தகம் நடப்பதால், தரகுப் பெருமுதலாளிகளின் - அந்நிய ஏகபோக முதலாளிகளின் நலனுக்காகவே இக்கொடிய பூச்சி மருந்தை இந்தியா அனுமதித்து வருகிறது. இன்று உலகில் அதிக அளவில் எண்டோசல்பானைப் பயன்படுத்தும் நாடாகவும், அதிக அளவில் ஏற்றுமதி செய்து வரும் நாடாகவும் இந்தியா மாறியுள்ளது.

இந்நிலையில், விவசாயத்தையும் சுற்றுச்சூழலையும் நஞ்சாக்கும் எண்டோசல்பானின் கொடிய விளைவுகளை விளக்கி, அதை முற்றாகத் தடைசெய்ய வலியுறுத்தியும்; இந்திய விவசாயம் தரகுப் பெருமுதலாளிகள் மற்றும் பன்னாட்டு ஏகபோக கம்பெனிகளின் இரும்புப் பிடியில் சிக்கியுள்ளதை உணர்த்தி, பி.டி. கத்தரி - பி.டி. பருத்தி முதலானவற்றைத் தடைசெய்யக் கோரியும், கடந்த மே மாதத்திலிருந்து தமிழகமெங்கும் விவசாயிகள் விடுதலை முன்னணி தாங்கள் செயல்படும் பகுதிகளில் தொடர் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகிறது.

மே 30 அன்று உசிலம்பட்டியில், வத்தலகுண்டு சாலை மெயின்பஜார் அருகே காட்சி விளக்கப் படங்களுடன் வி.வி.மு. நடத்திய தெருமுனைக் கூட்டம் விவசாயிகளிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியது. “எண்டோசல்பானை விரட்டியடி!” என்ற தலைப்பிலான பிரசுரத்தை வெளியிட்டு, கிராமங்கள்தோறும் பிரச்சாரத்தை நடத்தி வரும் தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்ட வி.வி.மு., கடந்த 31.5.2011 அன்று தேன்கனிக்கோட்டை வட்டம் அஞ்செட்டியில் தெருமுனைக் கூட்டத்தை நடத்தியது. பொதுக்கூட்டம் போல நூற்றுக்கணக்கில் விவசாயிகள் திரண்ட இக்கூட்டத்தில், எண்டோசல்பானின் கொடூரத்தை உணர்ந்து பார்வையாளர்களாக இருந்த விவசாயிகள் தோழர்களுடன் சேர்ந்து முழக்கமிட்டதோடு, தங்களையும் அமைப்பில் இணைத்துக் கொள்ள முன்வந்தனர். எண்டோசல்பானுக்கு எதிரான இப்பிரச்சார இயக்கம், இந்திய விவசாயத்தின் மீதான பன்னாட்டு கம்பெனிகளின் ஆதிக்கத்துக்கு எதிரான பிரச்சார இயக்கமாக முன்னேறி வருகிறது.

- பு.ஜ. செய்தியாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## நிகமானந்தா:

# பா.ஜ.க.வின் முகத்திரையைக் கிழித்த தியாகச் சாமியார்

பாபா ராம்தேவ் மற்றும் அன்னா ஹசாரேவின் உண்ணாவிரதப் போராட்டங்கள் ஊடகங்களால் பெரிதுபடுத்தப்பட்ட நிலையில், ஹரித்துவாரில் நிகமானந்தா சரஸ்வதி என்ற சாமியார் நடத்திய உண்ணாவிரதம் பேசப்படவில்லை. தனது நீதியான போராட்டத்துக்காக அவர் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த போதிலும், அவரது தியாகம் போற்றப்படவில்லை.

மாத்ரி சதன் எனும் ஆசிரமத்தின் 34 வயதான சாமியாரான நிகமானந்தா, ரிஷிகேசம் முதல் பிரயாகை வரையிலான பகுதியில் 146 தொழிற்சாலைகளின் ஆலைக் கழிவுகளும், வழியெங்கும் நூறுக்கும் மேற்பட்ட சிறு, பெரு நகரங்களின் சாக்கடைகளும் கங்கையில் கலப்பதைத் தடுத்து நிறுத்தி, கங்கையைக் காக்கக் கோரி 1998-இல் 73 நாட்களும், 2010-இல் 68 நாட்களும் உண்ணாவிரதம் இருந்தார். ஆனால், உத்தர்கண்டை ஆளும் பா.ஜ.க. அரசு இவற்றைப் பொருட்படுத்தாமல் அலட்சியப்படுத்தியது.

கடந்த பிப்ரவரி 19-ஆம் தேதியன்று, கங்கைக் கரையோரப் பகுதிகளில் இயங்கிவரும் சட்டவிரோதக் கல்குவாரிகளை அகற்ற வேண்டும், கும்ப் எனுமிடத்தில் மத்திய சுற்றுச்சூழல் துறையின் அனுமதியுடன் நடைபெற்றுவரும் சுரங்கப் பணிகள் தடை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளுடன், கங்கையைக் காக்க அவர் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். ஏப்ரல் 27-ஆம் தேதியன்று அவரது உடல்நிலை மோசமடைந்ததால், அரசு மருத்துவமனையிலும் அதன் பிறகு உத்தர்கண்ட் மாநிலத்தின் ஹிமாலயன் மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டு, மே 2-ஆம் தேதியன்று மூளைச்சாவுக்குச் (கோமா நிலைக்கு) சென்று, கடந்த ஜூன் 13-ஆம் தேதியன்று மரணமடைந்தார்.

“அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதும் அவருக்கு ஆர்க்னோ பாஸ்பேட் என்ற மருந்து செலுத்தப்பட்டதை அவரது இரத்தப் பரிசோதனை அறிக்கை காட்டுகிறது. அதன் பிறகுதான் அவர் கோமா நிலைக்குப் போயுள்ளார். அவருக்கு ஊசி போட்ட நர்சை அதற்குப் பின்னர் மருத்துவமனையில் பார்க்க முடியவில்லை. எனவே, அவரது மரணத்துக்கு கல்குவாரி மாஃபியாக்கள்தான் காரணம்” என்று நிகமானந்தாவின் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இந்த சந்தேகங்களைக் குறிப்பிட்டு மருத்துவமனையின் தலைமை அதிகாரி மற்றும் ஹிமாலயன் ஸ்டோன் நிறுவனத்தின் அதிபரான கியானேஷ் குமார் ஆகியோர் மீது போலீசில் புகார் கொடுக்கப்பட்ட போதிலும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால், நிகமானந்தாவின் உடலை மீண்டும் பிரேதப் பரிசோதனை நடத்தி சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று மாத்ரி சதன் ஆசிரமத்தினர் கோரியுள்ளனர்.

தியாகியின் உடலை அடக்கம் செய்யும் மாத்ரிசதன் ஆசிரமத்தினர்.
(உள்ளே:) உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த சாமியார் நிகமானந்தா.



இதே காலகட்டத்தில் பா.ஜ.க.வில் இணைந்துள்ள உமாபாரதி, கங்கையின் குறுக்கே கட்டப்படும் அணையால் புராதனக் கோயில் மூழ்கிப் போய்விடும் என்று உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். அவருடன் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சமாதானப்படுத்தியதும், அவரது போராட்டம் முடிவுக்கு வந்தது. ஆனால் நிகமானந்தா நடத்திய போராட்டம் குறித்து அரசோ, அமைச்சர்களோ



படிப்பகம்

www.padippakam.com

எவ்வித அக்கறையும் காட்டவில்லை. ஏனெனில், நிகமானந்தாவுக்குப் பின்துணையாக எந்த ஓட்டுக்கட்சியும் இல்லை. நிகமானந்தா அனுமதிக்கப்பட்ட மருத்துவமனையில்தான் பாபா ராம்தேவும் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரைப் பார்த்துச் சென்ற பா.ஜ.க. தலைவர்கள், பக்கத்து அறையில் மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த நிகமானந்தாவை எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

நாளைய தலைமுறையினருக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் கங்கையைக் காக்க உண்ணாவிரதமிருந்து தியாகியாகியுள்ளார், நிகமானந்தா. அவரது மரணத்தைத் தொடர்ந்து, உத்தர்கண்ட் பா.ஜ.க. முதல்வர் பதவி விலக வேண்டுமென்று போராட்டம் நடத்துகிறது காங்கிரசு. மறுபுறம், சுற்றுச்சூழல் அமைச்சர் அனுமதி கொடுத்ததால்தான் சட்டவிரோத குவாரிகள் இயங்குகின்றன என்று கூறி, ஜெய்ராம் ரமேஷின் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை பா.ஜ.க. நடத்துகிறது.

இரண்டுவகை கொலைகாரர்களும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டு, இக்கொலையை மூடி மறைக்க முயற்சித்துவரும் நிலையில், விளம்பர உண்ணாவிரதப் போராட்டத்துக்கும் இலட்சிய உணர்வுடன் நடத்தும் போராட்டத்துக்கும் இடையிலான வேறுபாட்டை நாட்டுக்கு உணர்த்திவிட்டு தியாகியாகியுள்ளார், நிகமானந்தா.

● குமார்

# அரசின் அலட்சியத்துக்கு எதிராக கிராம மக்களின் போர்க்கோலம்

கடந்த 2006-ஆம் ஆண்டில் சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையை விரிவாக்கம் செய்த போது, கடலூர் மாவட்டத்திலுள்ள சிறுநெசலூர் கிராமத்தில், சாலையின் கீழ்ப்புறம் கிராமமும் மேற்புறம் தொடக்கப் பள்ளியுமாகத் துண்டாடப்பட்டது. அதிவிரைவாக வாகனங்கள் செல்லும் நெடுஞ்சாலையைக் கடந்து குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல இயலாத நிலையில், தமது குடியிருப்புப் பகுதியிலேயே பள்ளிக்கூடத்தைக் கட்டித்தருமாறு தாழ்த்தப்பட்டோரான இக்கிராம மக்கள் பலமுறை கோரியபோதிலும், அதிகார வர்க்கம் தொடர்ந்து அலட்சியப்படுத்தியது. கடந்த ஆண்டில் அய்யனார் கோயில் தரிசு நிலத்தில் பள்ளிக்கூடம் கட்டித்தரக் கோரி, அதற்கான ஏற்பாடுகளை இக்கிராம மக்கள் செய்து கொடுத்து மாவட்ட ஆட்சியர் மூலம் முயற்சித்த போதிலும், இந்து அறநிலையத் துறை அதிகாரிகள் ஆதிக்க சாதி வெறியர்களுக்கு ஆதரவாக நின்று இந்நிலத்தை சந்தை மதிப்புக்குத்தான் தர இயலும் என மறுத்துவிட்டனர்.

கடந்த ஐந்தாண்டுகளாகப் பள்ளிக் கட்டிடம் இல்லாததால், இக்கிராமத்தின் 200 மாணவர்களின் படிப்பு முற்றாகப் பாழாக்கப்பட்டுள்ளது. மனு கொடுப்பது, உண்ணாவிரதம், குழந்தைகளை மதிய உணவு வாங்காமல் நிறுத்துவது, தேர்தல் புறக்கணிப்பு - என இக்கிராம மக்கள் போராடிய போதெல்லாம் அதிகாரிகள் வாக்குறுதிகள் அளித்து தொடர்ந்து ஏய்ப்பதுதான் நடந்துள்ளது.

இக்கிராமத்தின் சமூக உணர்வுள்ள சிலர் விருத்தாசலம் வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணியைத் தொடர்பு கொண்ட பின்னர், வி.வி.மு.- வின் வழிகாட்டலில் இக்கிராமத்தில் பள்ளியை நிறுவுவதற்கான போராட்டக் குழு அமைக்கப்பட்டு, பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, ''அரசு அதிகாரிகள் மூடிய பள்ளியை நாமே திறப்போம்!'' என்ற முழக்கத்தோடு 10.6.2011 அன்று அடிக்கல் நாட்டுவிழா போராட்டம் அறிவிக்கப்பட்டது.

போராட்டத்தைத் தடுத்து நிறுத்த முயற்சித்த போலீசும் அதிகார வர்க்கமும், மக்களின் கோபத்துக்கு முன்னால் நிற்க முடியாமல் பின்வாங்கியது.

திட்டமிட்டபடி, 10-ஆம் தேதியன்று காலை விண்ணதிரும் முழக்கங்களுடன் ஊர்வலமாகப் புறப்பட்ட கிராம மக்கள் , போலீசின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு ஊரின் பின்புறமாக வந்து கோயில் புறம்போக்கு திடலில் திரண்டு, பள்ளிக்கான இடத்தை முற்றுகையிட்டு அமர்ந்து கொண்டு, கொளுத்தும் வெய்யிலில் பெண்கள் குழந்தைகளுடன் போராட்டத்தைத் தொடர்ந்தனர். முன்னணியாளர்களைக்



பள்ளிக்கான கொட்டகையை நிறுவும் போராட்டத்தில்சிறுநெசலூர் கிராம மக்கள்.

கோட்டாட்சியரிடம் பேச்சுவார்த்தைக்கு அழைத்த போதிலும், பிரச்சினையைத் தீர்க்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியரிடம் உள்ளதால் அவரிடம் மட்டுமே பேசமுடியும் என்று போராட்டக் குழுவினர் அறிவித்துவிட்டு, பள்ளிக்கான கொட்டகையை ஊர்மக்களின் உற்சாகமான பங்களிப்புடன் நிறுவினர். பின்னர் மாவட்ட ஆட்சியரின் அழைப்பின் பேரில், முன்னணியாளர்கள் அவரை நேரில் சந்தித்த போது, ஜூலை 15-ஆம் தேதிக்குள் பள்ளிக் கட்டிடம் கட்ட இந்து அறநிலையத் துறையிடம் இடம் வாங்கித் தருவதாக அவர் உறுதியளித்துள்ளார்.

-பு.ஜ.செய்தியாளர், விருத்தாசலம்



படிப்பகம்

www.padippakam.com

## கிருஷ்ணா-கோதாவரி எண்ணெய் வயல் கொள்ளை:

# உமி கொண்டு வந்தான் அவல் தின்றான்

**தனியார்மயம் என்பதே கார்ப்பரேட் பகற்கொள்ளைதான் என்பதை அம்பானி நடத்திய கே.ஜி.ஊழல் விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.**

2-ஜி அலைக்கற்றை ஏல விற்பனையில் நடந்துள்ள கார்ப்பரேட் பகற்கொள்ளையைப் போல, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு வயல்களை ஏல விற்பனை செய்திருப்பதிலும் கார்ப்பரேட் பகற்கொள்ளை நடந்திருப்பது தற்பொழுது அம்பலமாகியிருக்கிறது. இலைமறை காயாக அதிகாரத் தாழ்வாரங்களில் கிசுகிசுக்கப்பட்டுவந்த இந்த ஊழலைப் பற்றிய இந்திய அரசின் தலைமை தணிக்கை அதிகாரியின் அறிக்கையைப் பத்திரிகைகள் வெளியிட்டதன் மூலம் இந்த கார்ப்பரேட் பகற்கொள்ளை அம்பலத்திற்கு வந்துவிட்டது.

2-ஜி அலைக்கற்றை பகற்கொள்ளையில் டாடா, அனில் அம்பானி, ரூயா உள்ளிட்டுப் பல தரகு முதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் ஆதாய மடைந்தனர் என்றால், கே.ஜி. என்றழைக்கப்படும் இந்த எரிவாயு ஏல விற்பனையில் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனமும், கெய்ர்ன் என்ற இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனமும் மிகப் பெரும் ஆதாயமடைந்துள்ளன. 2-ஜி பகற்கொள்ளைக்கு தி.மு.க.வின் ராசா உடந்தையாக இருந்தாரென்றால், இந்த கே.ஜி. பகற்கொள்ளைக்கு காங்கிரசின் முரளி தியோரா உடந்தையாக இருந்துள்ளார். 2-ஜி பகற்கொள்ளையைப் போலவே, இந்த கே.ஜி. பகற்கொள்ளையும் கல்லுளிமங்கன் மன்மோகன் சிங்குக்குத் தெரிந்தே, அவரது கண்ணசைவோடுதான் நடந்திருக்கிறது.

முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற ஏல விற்பனை முறையைப் பயன்படுத்திக் கொண்டு 2-ஜி ஊழல் நடந்தது என்றால், ''உற்பத்திப் பகிர்வு'' என்ற ஒப்பந்த முறைதான் இந்த கே.ஜி. ஊழலுக்கு அடிப்படையாக இருந்திருக்கிறது.

கிருஷ்ணா - கோதாவரிப் படுகையில் கச்சா எண்ணெயும்,இயற்கை எரிவாயுவும் இருப்பது கண்டறியப்பட்டவுடன், அதனைத் துரப்பணம் செய்து எடுத்து விற்பனை செய்யும் உரிமை, உற்பத்திப் பகிர்வு என்ற ஒப்பந்த முறையின் மூலம் ரிலையன்ஸ் குழுமத்திடமும், கெய்ர்ன் என்ற பன்னாட்டு நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்பட்டது. இந்த இயற்கை எரிவாயுவையும், கச்சா எண்ணெயையும் தோண்டியெடுக்க எவ்வளவு மூலதனம் போடப்படுகிறதோ, அம்மூலதனத்தை அந்நிறுவனங்கள் முழுமையாகத் திரும்ப எடுக்கும் வரை, அரசிற்கு குறைந்தபட்ச ''ராயல்டி'' தொகை கொடுத்தால் போதும் என்பதுதான் உற்பத்தி பகிர்வு ஏல ஒப்பந்தத்தின் அடிப்படையான அம்சம். இந்த மூலதனம் அதிகரிக்க, அதிகரிக்க, அரசிற்குக் குறைந்தபட்ச ராயல்டி கட்டணம் கொடுக்கும் காலமும் அதிகரித்துக் கொண்டே போகும். உமி கொண்டுவந்தவன் அவல் தின்னும் கதைதான் இது. இந்த ஒப்பந்த விதிதான் இந்தப் பகற்கொள்ளையின் ஆணி வேராக அமைந்துள்ளது.

முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம் இத்துரப்பணப் பணியைத் தொடங்கியபொழுது, தினந்தோறும் 4 கோடி கன மீட்டர் இயற்கை எரிவாயுவைத் தோண்டியெடுக்க 239 கோடி அமெரிக்க டாலர் மூலதனச் செலவு பிடிக்கும் எனக் கணக்குக் காட்டியது. பின்னர், இம்மூலதனச் செலவை 519 கோடி அமெரிக்க டாலராக அதிகரித்து, தினந்தோறும் 8 கோடி கன மீட்டர் இயற்கை எரிவாயுவைத் துரப்பணம் செய்யப் போவதாகக் கணக்குக் காட்டியது. இறுதியாக, இம் மூலதனச் செலவு 880 கோடி அமெரிக்க டாலரைத் தொட்டது.

இந்திய அரசிற்குக் குறைந்தபட்ச ராயல்டி என்ற எலும்புத் துண்டை வீசிவிட்டு, கொழுத்த கறியை ரிலையன்ஸின் அம்பானி மட்டுமே நீண்ட காலத் திற்குத் தின்பதற்கான ஏற்பாடுதான் இது. எரிவாயு உற்பத்தியை இரண்டு மடங்காக்குவதற்கு, நான்கு மடங்கு மூலதனச் செலவு மிகவும் அதிகம் எனப் பொருளாதார வல்லுநர்களே சுட்டிக் காட்டும்பொழுது, பெட்ரோலியத் துறை அமைச்சகமும் ஹைட்ரோ கார்பன் தலைமை இயக்குநரும் (Director General of Hydrocarbon) ரிலையன்ஸ் கொடுத்த மூலதனச் செலவு கணக்கை எவ்விதக் கேள்வியும் கேட்காமல் ஒப்புக் கொண்டு, இச்சதிக்கு உடந்தையாக இருந்துள்ளனர்.

இரண்டாவதாக, மூலதனச் செலவு அதிகரித்து விட்டதாக முகேஷ் அம்பானி காட்டிய கணக்கும் மோசடியானது. இயற்கை எரிவாயுவைத் துரப்பணவு செய்யும் இயந்திரத்தின் தினசரி வாடகை 1,20,000 அமெரிக்க டாலரிலிருந்து 5,50,000 டாலராக அதிகரித்துவிட்டது; வயல்களில் செய்யப்படும் சேவைகளுக்கான கட்டணம் நாளொன்றுக்கு 1,25,000 அமெரிக்க டாலரிலிருந்து 1,50,000 அமெரிக்க டாலராக அதிகரித்துவிட்டது என்றவாறு பல பொய்க் கணக்குகளை எழுதித்



படிப்பகம்

www.padippakam.com

தான் இம்மூலதனச் செலவை அதிகரித்துக் காட்டியது, ரிலையன்ஸ் நிறுவனம். இத்திருட்டுத்தனம் அனைத்திற்கும் பெட்ரோலியத் துறை அமைச்சராக இருந்த முரளி தியோராவும், ஹைட்ரோகார்பன் தலைமை இயக்குநராக இருந்த சிபலும் உடந்தையாக இருந்துள்ளனர்.

கிருஷ்ணா-கோதாவரிப் படுகை பத்தாண்டுகளுக்கு முன் ரிலையன்ஸுக்குக் குத்தகைக்கு விடப்பட்டது. எனினும், அந்நிறுவனம் 2009-ஆம் ஆண்டு முடிய அப்படுகையின் 14 ''பிளாக்கு''களில் எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டவில்லை. குத்தகை ஒப்பந்த விதிகளின்படி, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கிணறுகள் தோண்டாத இடங்களை, ஏறத்தாழ அப்படுகையின் 50 சதவீத நிலப்பரப்பை ரிலையன்ஸ் நிறுவனம் அரசிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால், நடந்ததோ வேறு. அச்சமயத்தில் ஹைட்ரோகார்பன் தலைமை இயக்குநராக இருந்த சிபல், எண்ணெய் வளம் நிறைந்த, ஆனால் எண்ணெய்க் கிணறுகள் தோண்டாத பகுதிகளை, ரிலையன்ஸுக்குச் சாதகமாக கிணறுகள் தோண்டப்பட்ட பகுதியாக அறிவித்து, அப்பகுதிகளை அரசு மீண்டும் தன்வசம் எடுத்துக் கொள்வதைத் தடுத்தார். சிபலின் இந்த மோசடித்தனமான முடிவை பெட்ரோலியத்துறை செயலர் தள்ளுபடி செய்துவிட்டாலும், அப்பொழுது பெட்ரோலியத் துறை அமைச்சராக இருந்த முரளி தியோரா, கூடுதல் செயலர் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்து ரிலையன்ஸுக்கு ஆதரவாக ஒப்புதல் கிடைக்கச் செய்தார்.

சிபலும், முரளி தியோராவும் ரிலையன்ஸுக்குச் சாதகமாக விதி மீறல்களில் ஈடுபட்டனர் என்பது ஒரு புறமிருக்க, எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்படாத அந்த 50 சதவீத நிலப்பரப்பை ரிலையன்ஸிடமிருந்து மீளப் பெறாததன் மூலம், அந்நிலப்பரப்பை மறு ஏலம் மூலமாகக் கூடுதல் விலையில் வேறு நிறுவனங்களுக்கு விற்பதையும் தடுத்துவிட்டனர். இதனால் அரசுக்குப் பெரும் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், கிருஷ்ணா - கோதாவரிப் படுகையில் எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டும் குத்தகையினை எடுத்துள்ள கெய்ர்ன் என்ற பன்னாட்டு நிறுவனத்திற்கும் விதிமுறைளை மீறி இது போன்ற சலுகை காட்டப்பட்டுள்ளதையும் தணிக்கை அறிக்கை அம்பலப்படுத்தியிருக்கிறது. மேலும், இராசஸ்தான் மாநிலத்தில் எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டும் குத்தகையை எடுத்துள்ள கெய்ர்ன் நிறுவனம், கிணறுகளைத் தோண்டத் தனக்கு ஒதுக்கப்பட்ட பகுதியையும் தாண்டி, ஏறத்தாழ 1,600 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பகுதியையும் ஆக்கிரமித்துக் கொண்டு கிணறுகளைத் தோண்டி வருகிறது. இச்சட்ட விரோத ஆக்கிரமிப்புக்கும், கச்சா எண்ணெய்க் கொள்ளைக்கும் பெட்ரோலியத் துறை அமைச்சகம் உடந்தையாகச் செயல்பட்டிருப்பதையும் தணிக்கை அறிக்கை சுட்டிக் காட்டியிருக்கிறது.

இக்குத்தகை குறித்த கோப்புகளையும், நிர்வாக ரீதியாக எடுக்கப்பட்ட முடிவுகளையும் முழுமையாகத் தணிக்கைக்குத் தராமல் இழுத்தடிப்பதால், இப்பகற்கொள்ளையின் மூலம் ரிலையன்ஸ் அடைந்துள்ள ஆதாயத்தைத் தற்பொழுது கணித்துச் சொல்ல முடியாது எனத் தணிக்கை துறை குற்றஞ்சுமத்தியுள்ளது. எனினும், இப்பகற்கொள்ளையின் மூலம் ரிலையன்ஸ் அடைந்துள்ள சட்டவிரோத ஆதாயம் 60,000 கோடி ரூபாய்க்கு மேலாக இருக்கும் எனப் பத்திரிகைகள் கணித்துள்ளன.

காங்கிரசைச் சேர்ந்த முரளி தியோரா அமெரிக்காவின் நிர்பந்தம் காரணமாக பெட்ரோலியத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட பிறகுதான், இம்மோசடி முழுமூச்சுடன் நடந்துள்ளது. இம்மோசடி தொடர்பாக 2006-ஆம் ஆண்டில் சி.பி.ஐ. நடத்திய விசாரணை பாதியிலேயே கைவிடப்பட்டுள்ளது. அச்சமயத்தில் வருவாய்த் துறை செயலராக இருந்த இ.ஏ.எஸ். சர்மா இப்பகற்கொள்ளை குறித்து விளக்கி பிரதமர் அலுவலகத்துக்கு எழுதிய கடிதங்கள் குப்பைக்கூடையில் வீசி

கூட்டுக் களவாணிகள்: (இடமிருந்து) முன்னாள் பெட்ரோலியத் துறை அமைச்சர் முரளி தியோரா, முன்னாள் ஹைட்ரோ கார்பன் தலைமை இயக்குநர் வீ.கே.சிபல், மற்றும் ரிலையன்ஸ் நிறுவன அதிபர் முகேஷ் அம்பானி.





படிப்பகம்

www.padippakam.com

யெறியப்பட்டுள்ளன. இப்பகற் கொள்ளை தொடர்பான தணிக்கைத் துறையின் வரைவு அறிக்கையையும் வெளியே விடா மல் பெட்ரோலியத் துறை அமைச் சகம் முடக்கி வைத்திருக்கிறது.

தி.மு.க.வைப் பழி தீர்த்துக் கொள்ளும் நோக்கத்தோடு அலைக் கற்றை ஊழலை அம்பலப்படுத்தி வரும் சு.சுவாமி, ஜெயா மாமி, சோ ராமஸ்வாமி உள்ளிட்ட பார்ப்பனக் கும்பல்கள், இந்த கே.ஜி. ஊழலைப் பற்றியோ, அதன் மூலம் காங்கிரசு அடைந்துள்ள ஆதாயங் களைப் பற்றியோ பேச மறுக்கின் றன. பா.ஜ.க.விற்கும் ரிலை யன்ஸுக்கும் இடையே இருந்து வரும் நெருக்கம் பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. கச்சா எண்ணெய் துறையில் இறங்கி யுள்ள ரிலையன்ஸுக்கு 90,000 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகை அளிக்க வேண்டும் என காங்கிரசு நாடாளுமன்றத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு கோரிய பொழுது, அதற்கு ஆதரவளித்தது, பா.ஜ.க. இந்த நெருக்கம் காரணமா கத்தான் பா.ஜ.க., இப்பகற் கொள்ளை தொடர்பாக கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோர மறுக்கிறது.

நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக இருக்கும் பா.ஜ.க.வின் முரளி மனோகர் ஜோஷி, இப்பகற் கொள்ளையைப் பற்றிப் பேசாமல், தணிக்கைத் துறையின் அறிக்கை வெளியே கசிந்ததை உரிமை மீறல் என முத்திரை குத்துகிறார்.

தனியார்மயம் என்பதே கார்ப் பரேட் பகற்கொள்ளைதான் என்ப தற்கும், இப்படிபட்ட ஊழல்களுள் ஒன்றிரண்டு மட்டுமே அரசியல் காரணங்களை முன்னிறுத்தி அம் பலப்படுத்தப்பட்டு, வழக்கு விசார ணைக்கு உட்படுத்தப்படுகின்றன; மீதமுள்ளவை வெளியே தெரிந்த வேகத்திலேயே அமுக்கப்பட்டு விடுகின்றன என்பதற்கும் இந்த கே.ஜி. ஊழல் மற்றொரு உதாரண மாக அமைந்துள்ளது.

• ரஹீம்

## வழக்குரைஞர் சங்கரசுப்பு மகன் கொலை:

# போலீசு கொடூரம்

மனித உரிமை ஆர்வலரும், போலீசு அட்டூழியங்களுக்கு எதி ராகத் தொடர்ந்து போராடி வருப வரும், சென்னை உயர் நீதிமன்ற வழக்குரைஞருமான சங்கரசுப்பு வின் மகன் சதீஷ்குமார் போலீசு வெறியர்களால் கோரமாகக் கொல்லப்பட்டுள்ள சம்பவம், தமிழகத்தையே பதைபதைக்கச் செய்துள்ளது.

சட்டப்படிப்பு படித்துள்ள 24 வயதேயான சதீஷ்குமார், கடந்த ஜூன் 7-ஆம் தேதியன்று இரவில் வெளியே சென்று வீடு திரும்பாத நிலையில், மறுநாள் காலை திரு மங்கலம் போலீசு நிலையத்தில் புகார் கொடுத்தார், சங்கரசுப்பு. அதன் பிறகு அண்ணாநகர் டி.சி.யைச் சந்தித்தும், கமிஷனர் திரிபாதியைச் சந்தித்தும் முறை யிட்டுள்ளார். இதற்கிடையே 9-ஆம் தேதியன்று சதீஷ்குமாரின் செல்போனை எடுத்துப் பேசிய ஒரு போலீசுக்காரர், ஐ.சி.எப். வடக்கு காலனி ஏரிக்கரையில் மோட்டார் சைக்கிள் அருகே இந்த செல்போன் கிடந்ததாகத் தெரிவித் துள்ளார்.

பின்னர், ஜூன் 10-ஆம் தேதி யன்று சென்னை உயர் நீதிமன்றத் தில் ஆட்கொணர்வு மனுவை சங் கரசுப்பு தாக்கல் செய்துள்ளார். திரு முல்லைவாயில் போலீசு நிலையத் தின் போலீசு ஆய்வாளர்களான கண்ணன், ரியாசுதீன் ஆகியோர் தனது மகனைக் கொலை செய் திருப்பார்கள் என்று சந்தேகம் உள்ளதாகவும், ரியாசுதீனின் வீடு ஐ.சி.எப். ஏரிக்கரை பகுதியில்தான் உள்ளது என்பதால், அப்பகுதியில் தேடுதல் வேட்டையை நடத்த வேண்டும் என்றும் சங்கரசுப்பு தனது ஆட்கொணர்வு மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

போலீசு அட்டூழியங்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடிவரும் சென்னை உயர் நீதிமன்ற வழக்குரைஞர் சங்கரசுப்பு. கொல்லப்பட்ட அவரது அன்பு மகன் சதீஷ்குமார்.







படிப்பகம்

www.padippakam.com

அதன்பிறகு நீதிமன்றம் சிறப்புக் குழு அமைத்துத் தேடுமாறு போலீசுக்கு உத்தரவிட்டது. அந்த ஏரியில் 13-ஆம் தேதிவரை தேடிப் பார்த்து ஏதும் கிடைக்கவில்லை என்று இக்குழு தெரிவித்தது. 13-ஆம் தேதியன்று ''மக்கள் டிவி''யின் செய்தியாளர்கள் இது குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற போது, அந்த ஏரியில் வெங்காயப் பூண்டு செடிகளுக்கு மத்தியில் ஒரு சடலம் மிதப்பதைப் பார்த்து போலீசுக்குத் தகவல் தெரிவிக்க, அதன் பின்னரே அழுகிய நிலையில் சதீஷ் குமாரின் சடலம் மீட்கப்பட்டது. சங்கரசுப்பு தனது ஆட்கொணர்வு மனுவில் தெரிவித்திருந்ததைப் போலவே, ஐ.சி.எப். ஏரிக்கரையில் சதீஷ்குமாரின் சடலம் கிடைத்திருப்பதிலிருந்து கூலிப் படையை ஏவி இக்கொலையை போலீசு ஆய்வாளர்களான கண்ணனும் ரியாசுதீனும் செய்திருப்பார்கள் என்று நம்புவதற்கு வலுவான காரணங்கள் உள்ளன.



கொலைகார போலீசை எதிர்த்து வழக்குரைஞர்களின் ஆர்ப்பாட்டம்

போலீசு ஆய்வாளர்களான கண்ணனும் ரியாசுதீனும் விசாரணைக் கைதிகளைக் கொடூரமாக வதைத்துப் பணம் பறிப்பதில் பேர்போனவர்கள். கும்மிடிப்பூண்டி முன்னாள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. வான சுதர்சனத்தைக் கொலை செய்த வட நாட்டைச் சேர்ந்த ஓம்பிரகாஷ் என்ற கொள்ளைக்காரனைப் பிடிக்க உ.பி. மாநிலத்துக்குப் போன இவ்விரு போலீசுக்காரர்களும் அவனைப் பிடிக்க முடியாமல், அவனுடைய அண்ணன் மகன்கள் இருவரைப் பிடித்துச் சித்திரவதை செய்து, பின்னர் போலி மோதலில் சுட்டுக் கொன்ற பயங்கரவாதிகளாவர்.

திருமுல்லைவாயிலைச் சேர்ந்த அருண்குமார் என்பவரைத் திருட்டுக் குற்றம் சாட்டிச் சட்டவிரோதமாக அடைத்து வைத்து இவர்கள் சித்திரவதை செய்து பணம் பறித்து வந்தனர். இந்நிலையில் அருண்குமாரை நீதிமன்றத்தில் கொண்டுவந்து நிறுத்துமாறு ஆட்கொணர்வு மனுவை சங்கரசுப்பு தாக்கல் செய்ததோடு, இவ்விரு காக்கிச்சட்டை கயவாளிகளின் அயோக்கியத்தனத்தைத் திரைகிழித்தார். இவ்விருவருக்கும் ரூ. 25 ஆயிரம் அபராதம் விதித்து, இவர்கள் மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனால் ஆத்திரமடைந்த இவ்விரு போலீசுக்காரர்களும் ''உனக்குக் குடும்பம் இருப்பதை மறந்துவிடாதே'' என்று சங்கரசுப்புவை மிரட்டியதோடு, வழக்கிலிருந்து விலகிக் கொள்ளுமாறு எச்சரித்துள்ளனர். எனவே, இவர்கள்தான் இக்கொலையைச் செய்துள்ளனர் என்று சங்கரசுப்பு மட்டுமின்றி, உயர் நீதிமன்ற வழக்குரைஞர்களும் உறுதிபடத் தெரிவிக்கின்றனர்.

சதீஷ்குமார் கொடூரமாகச் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட பிறகுதான், சில நாட்கள் கழித்து அவரது உடல் ஏரியில் வீசப்பட்டுள்ளது என்று பிரேதப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15-ஆம் தேதியன்று கீழ்ப்பாக்கம் மருத்துவனையில் பிரேதப் பரிசோதனை நடந்த போது 500-க்கும் மேற்பட்ட வழக்குரைஞர்களும் சமூக ஆர்வலர்களும் திரண்டு போலீசுத் துறை ரவுடிகளைக் கைது செய் என்று முழக்கமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தியதோடு, கொலைகாரப் போலீசுக்கு எதிராக முழக்கமிட்டபடியே சதீஷ்குமாரின் இறுதி ஊர்வலத்தை நடத்தினர். இப்படுகொலைக்கு எதிராக வழக்குரைஞர்கள் உடனடியாக ஒரு நாள் நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டத்தை அறிவித்த பிறகே, இந்த வழக்கை சி.பி.ஐ.யிடம் நீதிமன்றம் ஒப்படைத்துள்ளது.

ஆட்சிக்கு வந்தவுடனேயே சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதுதான் தனது முதற்பணி என்று அறிவித்தார் ஜெயலலிதா. ஜெயா ஆட்சி என்றால் வரம்பற்ற அதிகாரத்துடன் போலீசு கொட்டமடிக்கும் என்பதை முந்தைய அவரது ஆட்சிகள் மட்டுமின்றி, தற்போது சதீஷ்குமாரின் படுகொலையும் அண்மைக்காலமாக பெருகிவரும் கொட்டடிக் கொலைகளும் நிரூபித்துக் காட்டுகின்றன. பாசிச ஜெயா ஆட்சியில் வழக்குரைஞர்களுக்கே இந்தக் கதி என்றால் சாமானிய மக்களின் கதி என்னவாகும் என்று சொல்ல வேண்டியதில்லை. கொலைகார போலீசுக்காரர்களையும், இப்பயங்கரவாதச் செயலுக்கு உடந்தையாக இருந்துள்ள போலீசு அதிகாரிகளையும் கைது செய்து, பகிரங்க விசாரணை நடத்தித் தூக்கிலிடவும், போலீசு பயங்கரவாதத்தை வீழ்த்தவும் உழைக்கும் மக்கள் போராடுவதே இன்றைய உடனடித் தேவையாக உள்ளது.

● மணி



படிப்பகம்

www.padippakam.com

## மும்பை பத்திரிகையாளர் டே படுகொலை:

# போலீசு-தாதாக்களின் கூட்டுச் சதி

**மும்பை நகரில் போலீசு–கிரிமினல் குற்றக் கும்பல்களின் கூட்டணி ஆட்சிதான் நடக்கிறது.**

மும்பையிலிருந்து வெளிவரும் மாலை நாளேடான ''மிட்-டே'' வின் மூத்த புலனாய்வு செய்தியாளரான ஜோதிர்மாய் டே, கடந்த ஜூன் 11-ஆம் தேதியன்று பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். தனது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அவரை, இரகசிய உலக குற்றக் கும்பல்கள் நடுவீதியில் சரமாரியாகச் சுட்டுக் கொன்ற இக்கொடுஞ்செயல், நாடெங்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 22 ஆண்டுகளாக இக்கிரிமினல் குற்றக் கும்பல்கள் பற்றி ஜோதிர்மாய் டே தொடர்ந்து எழுதி வந்தார். இக்குற்றக் கும்பலுக்கும் போலீசு, அதிகார வர்க்கம், அரசியல்வாதிகளுக்கும் இடையிலான உறவு பற்றிய பல உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தவர்களில் அவரும் ஒருவர்.

எண்ணெய் டேங்கர் லாரிகளை மிரட்டிக் கடத்திச் சென்று எண்ணெயைக் கைப்பற்றுவதும், எண்ணெயில் கலப்படம் செய்து விற்பதும் மகாராஷ்டிராவில் கிரிமினல் குற்றக் கும்பல்களின் மிகப் பெரிய தொழிலாக வளர்ந்து விட்டது. இந்த எண்ணெய் மாஃபியாக்களைப் பிடிக்கப் போன உதவி கலெக்டர் யஷ்வந்த் சோனேவானா-வை பெட்ரோல் ஊற்றி எரித்துக் கொன்றது இந்த மாஃபியா கும்பல். இந்த எண்ணெய் மாஃபியாக்களைப் பற்றி அடுத்தடுத்து அம்பலப்படுத்தி வந்தார், ஜோதிர்மாய் டே. இதுதவிர, மும்பை மாஃபியா கும்பல்களின் தலைவனாகிய தாவூத் இப்ராஹிமின் தங்கையுடன் கடத்தல் தொழிலில் ஈடுபட்டு வந்த போலீசு அதிகாரிகளைப் பற்றி எழுதினார். இதனால் அவர் மீது வன்மத்துடன் இருந்த எண்ணெய் மாஃபியாக்களும் இதர இரகசிய உலக மாஃபியாக்களும் கூலிப்படையை ஏவி அவரைக் கொன்றொழித்துள்ளனர்.

பத்திரிகையாளர்கள் மட்டுமல்ல; கட்டிட உரிமையாளர்களிடமிருந்து பணம் கறக்க கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் அப்பாவி பொறியாளர்களையும் பாதுகாவலர்களையும் இரகசிய உலக மாஃபியாக்கள் பலியிட்டு மிரட்டுவதும் மும்பையில் அதிகரித்துள்ளது. 'எண்கவுண்டர் ஸ்பெஷலிஸ்ட்' என்று போற்றப்பட்ட தயாநாயக், பிரதீப் சர்மா முதலான பல போலீசு உயரதிகாரிகள் இரகசிய உலகப் பேர்வழிகளுடன் கூட்டுச் சேர்ந்திருப்பது நிருபணமாகி, பதவி இறக்கம் செய்யப்பட்டனர். மும்பை நகரில் கிரிமினல் குற்றக் கும்பல்களின் ராஜ்ஜியம்தான் நடக்கிறது. மும்பை வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே ''பாய்'' என்று அழைக்கப்படும் இரகசிய உலகப் பேர்வழி இருக்கிறார். ஆசாத் மைதானப் பகுதியில்தான் தாவூத் இப்ராஹிமின் சகோதரியும் சகோதரரும் ஆர்ப்பாட்டமாக தொழில் நடத்துகின்றனர். டேவின் மரணம் நிகழ்ந்த அடுத்த 48 மணி நேரத்தில் ஆசாத் மைதானப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த துணைக் கமிஷனர் அனில் மகாபோலே பதவி இறக்கம் செய்யப்பட்டுள்ளார். ''புலனாய்வுச் செய்தியாளர் டே கொல்லப்பட்ட சம்பவத்தில், மகாபோலேவுக்குத் தொடர்பு இருக்கிறதா, இல்லையா என்பது பற்றி நான் மறுக்கவுமில்லை; உறுதி செய்யவுமில்லை'' என்கிறார், முதுநிலை போலீசு கமிஷனர் அரூப் பட்நாயக். இப்படி மகாபோலே போன்ற போலீசு அதிகாரிகள் உயர் பதவிகளில் அமர்த்தப்படும் அளவுக்கு போலீசுத்துறையையே ஆட்டிப் படைப்பவர்களாக இரகசிய உலகக் கிரிமினல்கள் வளர்ந்துள்ளனர்.

இப்படுகொலையைக் கண்டித்தும், மகாராஷ்டிர போலீசு மீது நம்பிக்கை இல்லாததால் இந்தக் கொலை வழக்கை

இரகசிய உலக கிரிமினல் குற்றக் கும்பல்களை அம்பலப்படுத்திய ஜோதிர்மாய் டே.





படிப்பகம்

www.padippakam.com



டே வின் படுகொலையைக் கண்டித்து மும்பையில் பத்திரிகையாளர்கள் நடத்திய பேரணி – ஆர்ப்பாட்டம்.

சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற வேண்டும்; பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்தும் குற்றத்தைப் பிணையில் வெளிவர முடியாத குற்றமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி மும்பை பத்திரிகையாளர்கள் பேரணி, ஆர்ப்பாட்டங்களை நடத்திய போதிலும், இவற்றை மாநில முதல்வர் பிரிதிவிராஜ் சவாண் ஏற்க மறுத்துள்ளார். மறுபுறம், மும்பையில் நான்கு பேரையும் இராமேசுவரத்தில் மூன்று பேரையும் பிடித்து, இவர்கள்தான் ஜோதிர்மாய் டே-வைக் கொன்றவர்கள் என்று கூறி, அதிருப்தியைத் தணிக்க முயற்சிக்கிறது மும்பை போலீசு.

தனியார்மயம்-தாராளமயமாக்கத்தைத் தொடர்ந்து கருப்புப்பண-கார்ப்பரேட் கொள்ளையர்களும் கிரிமினல் குற்றக் கும்பல்களும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகிவிட்டனர். அவற்றோடு அதிகார வர்க்கமும் போலீசும் கள்ளக்கூட்டுச் சேர்ந்திருப்பதால், கிரிமினல் குற்றக்கும்பல்களின் அட்டகாசங்களும் தீவிரமாகிவிட்டன. ரியல் எஸ்டேட், கட்டுமானப் பணிகள், சினிமா, சூதாட்டம், கிரிக்கெட் - என இரகசிய உலகப் பேர்வழிகளின் ஆதிக்கமும் கொட்டமும் கேள்வி முறையின்றித் தொடர்கிறது. கார்ப்பரேட் முதலாளிகளுக்கிடையிலான போட்டாபோட்டியில் கசியும் உண்மைகளை வைத்து செய்தியாளர்கள் இக்கிரிமினல் குற்றக் கும்பல்களையும் அவற்றுடன் கள்ளக் கூட்டு சேர்ந்துள்ள போலீசு மற்றும் அதிகாரவர்க்கத்தையும் அம்பலப்படுத்தி பரபரப்பான புலனாய்வுக் கட்டுரைகளை வெளியிடுகிறார்கள். இதையொட்டி இப்பத்திரிகையாளர்கள் அச்சுறுத்தப்படுவதும், தாக்கப்படுவதும் தொடர்கிறது.

மும்பை மட்டுமல்ல; சட்டிஸ்கர் மாநிலத்தின் பிலாஸ்பூரிலிருந்து வெளிவரும் ‘‘தைனிக் பாஸ்கர்’’ என்ற நாளேட்டின் செய்தியாளரான சுஷில் பதாக், கடந்த டிசம்பர் 20-ஆம் தேதியன்று அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த ஜனவரி 23 அன்று ‘‘நை துனியா’’ நாளேட்டின் செய்தியாளரான உமேஷ் ராஜ்புத், மோட்டார் சைக்கிளில் வந்த குண்டர்களால் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்டார். ‘‘உன் எழுத்தை நிறுத்தாவிட்டால், உன் மூச்சை நிறுத்துவோம்’’ என்ற குறிப்பும் அக்கொலைகாரர்கள் விட்டுச் சென்றுள்ளனர். 1992 முதலாக இந்தியாவில் 28 புலனாய்வு செய்தியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 14 பேர் மும்பையில் கொல்லப்பட்டிருக்கின்றனர். கடந்த பத்தாண்டுகளில் அதிக அளவில் செய்தியாளர்கள் கொல்லப்பட்டுள்ள 21 நாடுகளில் இந்தியா 6-ஆவது இடத்தில் இருக்கிறது.

இரகசிய உலக கிரிமினல் குற்றக் கும்பல்களால் அச்சுறுத்தப்படுவதும் கொல்லப்படுவதும் மட்டுமல்ல; நாடெங்கும் பத்திரிகையாளர்கள் போலீசாராலும் உளவுத் துறையினராலும் மிரட்டப்படுகின்றனர், அல்லது பொய்க்குற்றம் சாட்டிக் கைது செய்யப்படுகின்றனர். கடந்த ஜனவரியில் ‘‘விரோதி’’ என்ற பத்திரிகையின் ஆசிரியரான சுதிர் தாவலே மாவோயிஸ்டுகளுடன் கூட்டுச் சேர்ந்து சதி செய்தார் என்று பொய்க் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். கார்ப்பரேட் கொள்ளையையும் அதற்குத் துணை நிற்கும் அதிகாரிகள்-போலீசு கும்பலையும் அம்பலப்படுத்துவதால், ஒரிசாவிலும் சட்டிஸ்கரிலும் பத்திரிகையாளர்கள் உளவுத்துறை போலீசாரால் மிரட்டப்படுவது அதிகரித்து வருகிறது.

குறிப்பாக, மும்பை போலீசு கறைபடிந்ததாகிவிட்ட நிலையில், அதை வைத்துக்கொண்டு கிரிமினல் குற்றங்களைக் கண்டறியவோ, களையவோ ஒருக்காலும் சாத்தியமில்லை. கிரிமினல் குற்றக் கும்பல்களின் கூட்டாளியாகச் சீரழிந்து நிற்கும் மும்பை போலீசு கும்பலைக் கலைக்கக் கோரி போராடுவதும், பத்திரிகையாளர்கள் உழைக்கும் மக்களுடன் ஐக்கியப்படுவதன் மூலம்தான் அனைத்து சமூகவிரோத கும்பல்களின், கார்ப்பரேட் கொள்ளையர்களின் கொட்டங்களையும் முறியடிக்க முடியும்.

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

# சாலை கேட்டால் கொலை:

# இதுதான் நிதிஷ்குமாரின் சிறந்த 'அரசாளுமை'!

**அரசு பயங்கரவாதப் படுகொலைகளும் தனியார்மயச் சேவையுமே பீகாரின் சிறந்த அரசாளுமையாகிவிட்டது.**

டெல்லி ராம்லீலா மைதானத்தில் பாபா ராம் தேவின் ஊழல் எதிர்ப்பு சர்க்கஸ் தொடங்குவதற்கு ஒரு நாள் முன்னதாக, அதாவது ஜூன் 3-ஆம் தேதியன்று, பீகாரின் ஆராரியா மாவட்டத்தின் பர்பஸ்கன்ஜ் வட்டத்திலுள்ள ராம்பூர் மற்றும் பஜன்பூர் ஆகிய கிராமங்களில் போலீசு நடத்திய காட்டுமிராண்டித்தனமான துப்பாக்கிச் சூட்டில் ஒரு கர்ப்பிணிப் பெண்ணும் ஆறு மாதக் கைக்குழந்தையும் உள்ளிட்டு 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ராம்தேவையும் அவரது பரிவாரங்களையும் போலீசு விரட்டியடித்ததை மிகக் கொடிய வன்முறைத் தாக்குதலாகச் சித்தரித்த முதலாளித்துவ ஊடகங்கள், ஏழை முஸ்லிம்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய போலீசு கொலைவெறியாட்டத்தைப் பற்றி எந்த முக்கியத்துவமும் அளிக்கவில்லை.

பீகார் அரசு தொழிற்பேட்டை வளர்ச்சி ஆணையத்தின் மூலம் ஆரோ சுந்த்ராம் இன்டர்நேஷனல் என்ற நிறுவனத்துக்காக இக்கிராமங்களை ஒட்டியுள்ள புறம்போக்கு நிலத்தைப் பறித்துக் கொள்ள கடந்த ஆண்டு ஜூன் 24-ஆம் தேதியன்று மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்த நிலத்தின் வழியாகச் செல்லும் மண்சாலை இவ்விரு கிராமங்களையும் இணைப்பதோடு, என்.எச்-57 அதிவிரைவு நால்வழி நெடுஞ்சாலையையும் இணைக்கிறது. தற்போது நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள நிலப்பகுதியில் தொழிற்சாலை அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளதோடு, கிராமத்தை இணைக்கும் மண்சாலையும் அரசால் பறிக்கப்பட்டுள்ளது.

கூலி விவசாயிகளாகவும் கூலித் தொழிலாளர்களாகவும் உள்ள, ஏறத்தாழ ஆயிரம் ஏழை முஸ்லிம் குடும்பங்கள் இக்கிராமங்களில் உள்ளன. வேலை தேடி வெளியில் செல்வதற்கும் மருத்துவமனை, சந்தைக்குச் செல்வதற்குமான இணைப்புப் பாதையையும் அரசு அபகரித்துக் கொள்வதால், இனி நெடுஞ்சாலையை அடைய இக்கிராம மக்கள் நிர்ப்பந்தமாக 5,6 கி.மீ. சுற்றிக்கொண்டு செல்ல வேண்டும். எனவே, இந்த இணைப்புப் பாதையை அபகரிக்க வேண்டாமென்று பலமுறை மனு கொடுத்து இக்கிராம மக்கள் தர்ணா போராட்டம் நடத்தினர். அதன் பின்னர் பேச்சு வார்த்தைக்கு வந்த ஆலை நிர்வாகம், பறித்துக் கொள்ளப்படும் மண்பாதைக்குப் பதிலாக, ஆலையை ஒட்டிப் புதிய பாதையை அமைத்துக் கொடுத்த பிறகு கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதாக கடந்த ஜூன் முதல் நாளன்று கிராம மக்களிடம் வாக்குறுதி அளித்தது. ஆனால், இது ஒரு மோசடி நாடகம் என்பது அடுத்த நாளே அம்பலமானது.

ஐக்கிய ஜனதா தளம் - பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடக்கும் பீகாரில், பா.ஜ.க. சட்டமேலவை உறுப்பினரான அசோக் அகர்வாலின் மகனாகிய சௌரவ் அகர்வால், ரூ.130 கோடி திட்டத்துடன் தொடங்கப்படும் இந்த ஆலையின் இயக்குனர்களில் ஒருவராவார். பா.ஜ.க.வைச் சேர்ந்த பீகார் துணை முதல்வரான சுஷில் குமார் மோடி, தனது கூட்டாளியான அகர்வாலுக்காக பர்பஸ்கன்ஜ் வட்ட அரசு அதிகாரிகளையும் போலீசையும் ஏவி, விரைவில் பாதையைப் பறிக்க உத்தரவிட்டுள்ளார். அதன்படியே ஜூன் 2-ஆம் தேதியன்று இப்பகுதியில் பெரும்படையாக போலீசு குவிக்கப்பட்டு, கிராமத்தின் மண்சாலையை மறித்தும் சாலையின் நடுவே இருந்த சிறிய பாலத்தைத் தகர்த்தும், அசோக் அகர்வால் முன்னிலையில் ஆலை நிர்வாகத்தால் சுற்றுச் சுவர் எழுப்புவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த அநியாயத்தை எதிர்த்து ஜூன் 3 அன்று வெள்ளிக் கிழமை தொழுகை முடித்துவிட்டு வந்து கிராம மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆலைக்கான நிலத்தில் குவிக்கப்பட்டிருந்த போலீசுப் படை, அமைதியான முறையில் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த மக்களைச் சுற்றிவளைத்து, மிருகத்தனமாகத் தடியடித் தாக்குதல் நடத்தத் தொடங்கியது. இதைக் கண்டு வெகுண்ட கிராம மக்களில் ஒரு பிரிவினர் அரைகுறையாகக் கட்டப்பட்டிருந்த சுற்றுச்சுவரின் ஒரு பகுதியை இடித்தனர். உடனே, போலீசு கண்மூடித்தனமாக ஏறத்தாழ 100 ரவுண்டுகளுக்கு மேல் துப்பாக்கிச் சூடு நடத்தியது. படுகாயமடைந்து கீழே விழுந்து துடிதுடித்துக் கொண்டிருந்தவர்கள் மீது பாய்ந்து பூட்ஸ் காலால் எட்டி உதைத்தும் மிதித்தும் துப்பாக்கிக் கட்டையால் அடித்தும் எஞ்சியிருந்த உயிரையும் பறித்துள்ளது. போலீசு மற்றும் அரசு அதிகாரிகளுடன் இருந்த அசோக் அகர்வால், போலீசாரிடமிருந்து துப்பாக்கியைப் பிடுங்கி ஆத்திரம் தீர உழைக்கும் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளான்.

இக்கொடிய கொலைவெறித் தாக்குதலில் நௌஷத் அன்சாரி என்ற ஆறு மாதக் கைக்குழந்தை



படிப்பகம்

www.padippakam.com



போலீசு நடத்திய காட்டுமிராண்டித்தனமான துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட ஆறு மாதக் குழந்தை நௌஷத் அன்சாரி மற்றும் இளைஞர் முஸ்தபா அன்சாரி.

கொல்லப்பட்டதோடு, அக்குழந்தையின் தாயான ரஹீனா காட்டுன் என்ற இளம்பெண்ணின் கையில் குண்டு பாய்ந்து எலும்பு முறிந்து போயுள்ளது. ஆறு மாத கர்ப்பிணியான ஷாமின் காடூனின் உடலில் 6 குண்டுகள் பாய்ந்து கொல்லப்பட்டுள்ளார்.

இது திட்டமிட்டே படுகொலை செய்யும் நோக்கத்துடன் கண்மூடித்தனமாக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுதான் என்பதை, கொல்லப்பட்டவர்கள் அனைவரது தலை, முகம், கழுத்து, நெஞ்சு, வயிறுப் பகுதிகளில் குண்டு பாய்ந்திருப்பதும், தோட்டாக்கள் துளைத்துள்ள பல வீடுகளின் கதவுகள், ஜன்னல்களும் நிரூபித்துக் காட்டுகின்றன. இத்தனையும் போதாதென்று, போலீசு வெறியர்கள் தங்களது ஜீப்புக்குத் தாங்களே தீவைத்துக் கொண்டு, போராடிய மக்கள் மீது பழி போட்டுள்ளனர். அடுத்த நாளே, தனியார் நிறுவனத்தை நாசப்படுத்தி கலவரத்தில் ஈடுபட்டதாகவும், போலீசு ஜீப்பைக் கொளுத்தி போலீசார் மீது கொடிய ஆயுதங்கடன் தாக்குதல் நடத்தியதாகவும் குற்றம் சாட்டி, போராடிய 4000 கிராம மக்கள் மீது பொய்க் குற்றம் சாட்டி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

போலீசின் வெறியாட்டம் பீகார் மாநிலமெங்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள போதிலும், ஐக்கிய ஜனதா தளத்தின் முதல்வரான நிதிஷ் குமார், போலீசார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து மருத்துவமனையில் கிடத்தப்பட்டுள்ளவர்களுக்கு உரிய சிகிச்சையும் அளிக்கப்படவில்லை. இக்கொடுமையைப் பல்வேறு அமைப்புகளும் ஊடகங்களும் அம்பலப்படுத்திய பின்னரே, சுகாதாரத் துறை மெதுவாகச் செயல்பட்டது.

பர்பஸ்கன்ஜ் படுகொலை மட்டுமல்ல; கடந்த ஆண்டு டிசம்பர் 22 -ஆம் தேதியன்று குணாகந்தா அருகிலுள்ள முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள பாம்ராகா கிராம மக்கள் துணை இராணுவப் படையினரின் பாலியல் வன்முறையை எதிர்த்து போராடிய போது, எல்லைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சிப்பாய்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி நான்கு பேரைக் கொன்றொழித்தனர்.

பா.ஜ.க.வின் எம்.எல்.ஏ.வான ராஜ் கிஷோர் கேசரி, தன் மீது பாலியல் வன்முறை ஏவியதாக வழக்கு தொடுத்த பள்ளித் தலைமையாசிரியையான ரூபம் பதாக் என்ற பெண்ணை, பட்டப்பகலில் கத்தியால் குத்திக் கொன்றுள்ளான். கொல்லப்பட்ட ரூபம் பதக் மிரட்டிப் பணம் பறிக்கும் மோசக்காரி என்று கூசாமல் புளுகி இந்த வழக்கை நீர்த்துப் போக வைக்கச் செய்தார், துணை முதல்வரான சுஷில்குமார் மோடி.

தேசியக் கவியாகப் போற்றப்படும் ராம்தாரி சிங் தின்கர் என்பவரின் மருமகள், தனது மூதாதையர்களின் வீட்டை துணை முதல்வரான சுஷில் குமாரின் மருமகன் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதை எதிர்த்து டெல்லி ராஜ்காட்டில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். விதவையான அவர் தனது மகனுடன் நடத்திய இப்போராட்டம் பீகார் அரசின் யோக்கியதையை நாடெங்கும் படம் பிடித்துக் காட்டியது.

அன்னா ஹசாரேக்களாலும், பாபா ராம்தேவ்களாலும், இந்துவெறி பரிவாரங்களாலும், கார்ப்பரேட் முதலாளிகளாலும், முதலாளித்துவ ஊடகங்களாலும் ‘சிறந்த அரசாளுமை’ என்று ஏற்றிப் போற்றப்படும் பீகார் முதல்வர் நிதிஷ் குமார் ஆட்சியின் யோக்கியதை இதுதான்! மாநிலத்தின் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் அரசு பயங்கரவாதத்தை ஏவுவதும், தனியார்மயச் சேவையில் புதிய அத்தியாயம் படைப்பதும்தான் இவர்களால் சித்தரிக்கப்படும் சிறந்த அரசாளுமை என்பதை பீகாரில் நடந்துள்ள படுகொலைகளே நிரூபித்துக் காட்டுகின்றன.

● முத்து



படிப்பகம்

## தில்லி விமான நிலைய ஊழல்-கொள்ளை:

# தனியார்-பொதுத்துறை கூட்டு பல்லாயிரம் கோடி வேட்டு

**பொதுச்சொத்தைச் சூறையாடிய தில்லி விமான நிலைய ஊழலை தணிக்கை அதிகாரியின் அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.**

மத்திய அரசின் திட்டங்கள், ஒப்பந்தங்கள், வருவாய், செலவினம் போன்றவற்றை ஆண்டுதோறும் தணிக்கை செய்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தான் இந்திய பொதுத் தணிக்கை அதிகாரியின் பணியாகும். இந்தத் தணிக்கைகளில்தான் 2-ஜி அலைக்கற்றை ஊழல் அம்பலமானது. இந்த வரிசையில், இவ்வாண்டின் அறிக்கை வெளிக்கொண்டு வந்திருப்பதோ தில்லி விமான நிலைய ஊழல்.

தில்லியில் உள்ள பன்னாட்டு விமான நிலையத்தை விரிவாக்கி, மூன்றாவது முனையம் (டெர்மினல்-3) எனும் புதிய விமான நிலையத்தை உருவாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஜெர்மானிய ஃப்ராபோர்ட், மலேசிய ஏர்போர்ட் ஹோல்டிங்க்ஸ் நிறுவனம் ஆகியவை இந்திய பொதுத்துறை நிறுவனமான இந்திய விமானதள ஆணையத்துடன் இணைந்து ஆண்டுக்கு 3.4 கோடி பயணிகள் பயன்படுத்தும் வகையிலான இப்புதிய விமான முனையத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. இந்தத் திட்டத்திற்கென்று டி.ஐ.ஏ.எல். (தில்லி பன்னாட்டு விமானநிலையம் லிமிடெட்) எனும் பொதுத்துறை-தனியார்துறை கூட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டது.

இதில் பெங்களூருவைத் தலைமையிடமாகக் கொண்ட பன்னாட்டு நிறுவனமான ஜி.எம்.ஆர். குழுமத்தின் தலைமையிலான பல நிறுவனங்களின் கூட்டமைப்புக்கு 74 சதவீதப் பங்குகளும், பொதுத்துறை நிறுவனமான இந்திய விமானதள ஆணையத்துக்கு 26 சதவீத பங்குகளும் உள்ளன. ஒப்பந்தப்படி, இவ்விமானநிலைய சேவையில் கிட்டும் வருமானத்தில் 46 சதவீதம் இந்திய விமானதள ஆணையத்துக்கு வர வேண்டும். மீதியை ஜி.எம்.ஆர். குழுமத்தின் தலைமையிலான பல நிறுவனங்கள் எடுத்துக் கொள்ளும். 2006 -இல் தில்லி இந்திராகாந்தி பன்னாட்டு விமான நிலையத்தின் இயக்கம் மற்றும் நிர்வாகத்தைக் கையில் எடுத்துக் கொண்ட டி.ஐ.ஏ.எல்., மூல ஒப்பந்தத்தை மீறி பல துணைநிறுவனங்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு விமானச் சேவை மற்றும் பிற சேவைகளில் துணைநிறுவனங்களுக்குத் துணை ஒப்பந்தங்கள் அளித்து இந்திய விமானதள ஆணையத்துக்குக் கிடைக்க வேண்டிய 46 சதவீத இலாபத்தை குறைத்தது. இலாபத்தில் வெறும் 15 சதவீதம் மட்டுமே பொதுத்துறைக்கு வருமளவுக்கு ஏகப்பட்ட துணை ஒப்பந்தங்களைத் தனியாருக்கு வழங்கி முறைகேடு செய்துள்ளதை தணிக்கை அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. நூற்றுக்கு ரூ.46 லாபம் வந்திருக்க வேண்டிய இடத்தில் வெறுமனே ரூ.6.90 மட்டுமே பொதுத்துறைக்கு வந்துள்ளது.

டி.ஐ.ஏ.எல். நிறுவனமும் அது உருவாக்கிய பல கூட்டு ஒப்பந்த துணை நிறுவனங்களும் நடத்திய ஊழல் கொள்ளை - முறைகேடுகளால் இத்திட்டத்திற்கான செலவு ரூ. 8,955 கோடி அதிகரித்துள்ளது. விமான நிலைய விரிவாக்கத்துக்காக வாங்கப்பட்ட 48.5 ஏக்கர் நிலத்தை டி.ஐ.ஏ.எல். நிறுவனம், வர்த்தக ரீதியில் பயன்படுத்துவதற்கான உரிமையை தில்லி ஏரோட்ரோபொலிஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்துக்கு ரூ.775 கோடிக்கு உரிமம் அளித்துள்ளது. தில்லி விமானநிலையத்தின் அருகே ஒரு சதுர மீட்டர் நிலத்தின் மதிப்பு ரூ.1 லட்சம் என்றிருப்பதால், மொத்த மதிப்பு ரூ.1,960 கோடியாக இருக்க வேண்டும். இந்த வகையில் அரசுக்கு ரூ.1,185 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதைத்தவிர, விமானநிலையச் சேவைகளான உணவு, குடி

ஒய்யாரக் கொண்டையின் உள்ளே ஈறும் பேனும்: தனியார்மய ஊழல்-கொள்ளையின் அடையாளமாத் திகழும் தில்லி விமான நிலையம்.



www.padippakam.com

பானங்கள், விளம்பரங்கள், எரிபொருள் நிர்வாகம், தகவல்-தொழில்நுட்ப சேவை போன்றவை பொதுத்துறைக்குத் தரப்படாமல், ஒப்பந்தத்தை மீறி கூட்டு ஒப்பந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதால், அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த விதிமுறை மீறல்களைக் குறிப்பிட்டு விமானநிலையப் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையம் (ஏ.ஈ.ஆர். ஏ.), '''வருவாய்ப் பகிர்வு முறையில், முக்கியமான வருமான வழிகளை எல்லாம் கூட்டு ஒப்பந்த நிறுவனங்களிடம் டி.ஐ.ஏ.எல். கொடுத்து விட்டதால், இந்திய விமானதள ஆணையத்தின் வருமானம் பாதிக்கப்படுகிறது'' என விமானத்துறை அமைச்சகத்திடம் முறையிட்டுள்ளது.



நட்டத்தில் இயங்குவதாகக் கூறி ஆட்குறைப்பைத் திணித்து தனியார்மயமாக்கும் சதியை எதிர்த்து கடந்த ஏப்ரல் மாதத்தில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட ஏர் இந்தியா விமானிகள்.

விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சரான தேசியவாத காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த பிரபுல் பட்டேலுக்கு மிகவும் நெருக்கமான அதிகாரத் தரகர் தீபக் தல்வாருக்கு இத்திட்டத்தில் இரண்டு பெரிய ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனை அப்போதைய விமானத்துறைச் செயலர் எம்.நம்பியாரும் எதிர்த்துள்ளார். தீபக் தல்வார் 17 சதவீதப் பங்குகளை வைத்திருக்கும் ''ஏர் ரியான்டா இந்தியன் டூட்டி ஃப்ரீ சர்வீசஸ்'' எனும் நிறுவனத்துக்கு தில்லி விமானநிலையத்துக்குள் சுங்கவரியில்லாப் பொருட்கள் விற்பனை செய்யும் அங்காடி உரிமம் கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல, விமானங்களின் உள்ளே இயக்கப்படும் சிறப்புத் தொழில்நுட்பம் கொண்ட பிரத்யேக டிவிடி-க்கள் தல்வாரின் நிறுவனம் மூலம் வாங்கப்பட்டுள்ளன. இதில் தல்வார் நிறுவனம் பெருமளவுக்குக் கொள்ளையடித்தது. வெளிச்சந்தையில் 300 டாலர் மதிப்பிலான டிவிடி-க்களுக்கு இந்நிறுவனம் 3600 டாலர்கள் என விலை நிர்ணயித்து, பேரங்களுக்குப் பின் 3 ஆயிரம் டாலருக்கு அவற்றை விற்றுள்ளது.

உலகம் முழுவதும் சரக்கு விமானப் போக்குவரத்து வருவாயில் உயர்வு ஏற்பட்டுள்ளபோது, 2009 நவம்பருக்கும் 2010 செப்டம்பருக்கும் இடையில் தில்லி விமானநிலைய சரக்குப் போக்குவரத்து கையாளுகை வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதாவது, ரூ. 73 கோடி அளவிற்கு வருவாய் குறைந்ததுள்ளது. விமான நிலையக் கட்டுமானத்துக்கு முதலில் திட்டமிட்ட செலவான ரூ.5900 கோடி உயர்த்தப்பட்டு, ரூ.12700 கோடியாக்கப்பட்டது. இந்தச் செலவு அதிகரிப்பு விவகாரத்தில் சிவில் விமானத்துறை, இந்திய விமானதள ஆணையம் ஆகிய பொறுப்புள்ள அமைப்புகள் கலந்தாலோசிக்கப்படவில்லை என்றும் தணிக்கை அறிக்கை குற்றம் சாட்டியுள்ளது.

மொத்தத்தில், தனியார்-பொதுத்துறை கூட்டுத் திட்டத்தின் பெயரில், தில்லி விமான நிலையத் திட்டத்தில் முறைகேடுகள், மோசடிகள் மலிந்து ஊழல்மயமாகியுள்ளதை தணிக்கை அறிக்கை அம்பலமாக்கியுள்ளது. இந்த ஊழல் மட்டுமல்ல; எல்லாத் துறைகளிலும் தனியார்மயம் சாதித்திருப்பது இதைத்தான். 2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், இஸ்ரோ அலைக்கற்றை ஒதுக்கீடு, கிருஷ்ணா-கோதாவரி எரிவாயுத் திட்டம் - என அடுத்தடுத்து தனியார்மயத்தின் ஊழல்-கொள்ளைகள் அம்பலமாகிக் கொண்டுள்ளன. தில்லி விமானநிலைய நவீனமயத் திட்டத்திலோ பத்தாயிரம் கோடிக்கும் மேல் தனியார் நிறுவனங்கள் பொதுப் பணத்தை ஏப்பம் விட்டுள்ளன. தனியார்மயமும் தாராளமயம் தீவிரப்படுத்தப்பட்ட இரண்டாம் கட்ட சீர்திருத்தத்தில், ஊழல்-கொள்ளையின் பரிமாணமும் பல மடங்கு பெருகி கார்ப்பொரேட் கொள்ளையர்களின் அகோரப் பசிக்கு இந்தியாவின் பொதுச்சொத்துக்கள் சூறையாடப்பட்டு வருகின்றன.

மத்திய கண்காணிப்பு ஆணையராக இருந்து ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி என்.விட்டல், ''தனியார்மய-தாராளமயக் கொள்கைகள்தான் வியக்கத்தக்க அளவில் ஊழலுக்கு இட்டுச் சென்றுள்ளன. முன்பு ஊழல் என்பது சில்லரை வணிகம் போல இருந்தது. அப்போது தனி நபர்கள் உரிமங்களைப் பெறும் முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆனால், இப்போது பிரம்மாண்டமான நிறுவனங்கள் என்பதால் ஊழல்களும் பிரம்மாண்டமானதாக நடக்கின்றன'' என்கிறார். தனியார்மயம் என்பதே ஊழல்மயம்தான்; அது சூறையாடுவது பொதுச்சொத்தைத்தான் என்பது ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு நாளும் நிரூபணமாகிக் கொண்டே வருகிறது. இந்நிலையில், விமான நிலைய ஊழல் குறித்த தணிக்கை அதிகாரியின் அறிக்கை நாடாளுமன்றத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டு விசாரணை நடக்கும்; அதைத் தொடர்ந்து லோக்பால் சட்டம் நடைமுறைக்கு வந்து இத்தகைய கார்ப்பரேட் கொள்ளை ஒழிந்துவிடும் என்று நம்புவதும், கேழ்வரகில் நெய்வடிகிறது என்று நம்புவதும் ஒன்றுதான்.

● அழகு



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு நாடகம் நடக்குது

**இந்தியக் குழுக்கள் இலங்கைக்குச் சென்றுவருவதைப் பற்றி தமிழக ஓட்டுக் கட்சிகளும் ஊடகங்களும் மோசடிப் பிரச்சாரத்தை நடத்தி வருகின்றன.**

இந்திய அரசின் தேசியப் பாதுகாப்புச் செயலர் சிவ சங்கர் மேனன், வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ், பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார் ஆகியோர் அடங்கிய குழு, கடந்த ஜூன் 11 அன்று இலங்கைக்குச் சென்று, அந்நாட்டு அதிபர் ராஜபக்சேவையும் மற்ற பிற முக்கிய அதிகாரிகளையும் சந்தித்துவிட்டுத் திரும்பியது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை செல்வதற்கான முன்தயாரிப்புகளைச் செய்வதற்கும், இலங்கை - இந்திய இராணுவ அதிகாரிகளிடையே நடந்துவரும் வருடாந்திர பேச்சுவார்த்தைகள் தொடர்பான தயாரிப்புகளைச் செய்வதற்கும்தான் இக்குழு இலங்கைக்குச் சென்று திரும்பியிருக்கிறது. இலங்கை சென்றுவிட்டுத் திரும்பிய சிவசங்கர் மேனன் பத்திரிகையாளர்களிடம் நடத்திய உரையாடலே, தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்தோ, ஈழத் தமிழர்களின் மறுவாழ்வு, அதிகாரப் பகிரவு குறித்தோ இக்குழு எவ்வித முக்கிய ஆலோசனையும் நடத்தவில்லை என்பதற்கான சான்றாக உள்ளது.

ஆனால், இப்பயணம் பற்றியும், இப்பயணத்திற்கு முன்னதாகத் தேசியப் பாதுகாப்புச் செயலர் சிவசங்கர் மேனன் தமிழக முதல்வர் ஜெயாவைச் சந்தித்துவிட்டுச் சென்றது பற்றியும் தமிழகப் பத்திரிகைகள், ''தமிழக மீனவர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இலங்கை அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக உயர் அதிகாரிகள் குழு இலங்கை செல்வதாகவும், அது தொடர்பாக ஆலோசனை நடத்துவதற்காகதான் சிவசங்கர் மேனன் தமிழக முதல்வர் ஜெயாவைச் சந்தித்துவிட்டுப் போனதாகவும்'' புளுகித் தள்ளின.

நான்காவது ஈழப் போர் தொடங்கியதிலிருந்தே இந்தியக் குழுக்கள் அடிக்கடி இலங்கை சென்று திரும்புகின்றன. கடந்த தி.மு.க. ஆட்சி காலத்தில் ஈழப் போர் அதன் இறுதிக் கட்டத்தில் இருந்த நேரத்தில், போரை நிறுத்தவும், போரில் சிக்குண்ட ஈழத் தமிழர்களைக் காக்கவும்தான் இந்தியக் குழு இலங்கைக்குச் செல்வதாக, பொய்ப் பிரச்சாரம் நடத்தப்பட்டது. போர் முடிந்த பிறகோ, ஈழத் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு, மறுவாழ்வு குறித்தும், தமிழக மீனவர்களின் பிரச்சினை குறித்தும் பேச இந்தியக் குழு செல்வதாக பொய்ப் பிரச்சாரம் நடத்தப்படுகிறது.

முன்பு, பிரணாப் முகர்ஜியோ, எம்.கே. நாராயணனோ சென்னைக்கு வந்து தமிழக முதல்வராக இருந்த மு.க.வைச் சந்தித்துவிட்டு இலங்கைக்குச் சென்றார்கள். இப்பொழுது, சிவசங்கர் மேனன் ஜெயாவைச் சந்தித்துவிட்டுச் சென்றிருக்கிறார். ஆட்களும், ஆட்சியும் மாறிவிட்டாலும், இப்பொய்ப் பிரச்சாரம் மட்டும் எவ்வித மாற்றமும் இன்றித் தமிழகத்தை ஆளும் ஓட்டுக்கட்சியாலும், தமிழகப் பத்திரிகைகளாலும் தொடர்ந்து நடத்தப்படுகிறது.

நான்காவது ஈழப் போரை இந்தியாதான் வழிகாட்டி நடத்தியது. இந்தியா இலங்கை இராணுவத்துக்குத் தேவையான ஆயுதங்கள், பயிற்சிகளை மட்டும் வழங்கவில்லை. இந்திய இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகள் போர்க் களத்தில் இறங்கி நேரடியாகவே போரை வழிநடத்திச் சென்றனர். இப்படி போரை வழி நடத்திய இந்தியா, போர் நிறுத்தம் குறித்துப் பேசவா தனது அதிகாரிகளை இலங்கைக்கு அனுப்பி வைத்திருக்கும்? அச்சமயத்தில் பிரணாப் முகர்ஜி அல்லது எம்.கே.நாராயணன் தலைமையில் சென்ற இந்தியக் குழுக்கள், விடுதலைப் புலிகளை முற்றிலுமாக ஒழித்துக் கட்டுவது, அதன் தலைவர் பிரபாகரனையும் மற்ற தலைவர்களையும் சுற்றிவளைத்துப் பிடித்துக் கொல்வது, விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கிடைக்காமல் தடுப்பது போன்ற போர் உத்திகளைக் குறித்துப் பேசி முடிவெடுக்கதான் சென்றனர் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

2009-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல்கள் நடக்கவிருந்த சமயத்தில் பிரணாப் முகர்ஜி இலங்கைக்குச் சென்றபொழுது, அவர், ''விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குதான் சென்றிருப்பதாக'' மு.க., ப.சி. உள்ளிட்டோர் தமிழகத்தில் பிரச்சாரம் செய்தனர். ஆனால், இலங்கைக்கான இந்தியத் துணை தூதரக அதிகாரி விக்ரம் மிஸ்ரி, ''இலங்கை அரசின் இராணுவரீதியான வெற்றிதான் வடக்கு மாகாணத்தில் மட்டுமல்ல, இலங்கை முழுமைக்கும் அமைதியை ஏற்படுத்தும்; இராசபக்சேவின் கருத்தும் அதுதான்'' எனத் தன்னிடம் பிரணாப் முகர்ஜி கூறியதாக, அமெரிக்கத் தூதரகத் துணையதிகாரியிடம் தெரிவித்திருக்கிறார். இந்த உண்மையை விக்கிலீக்ஸ் இணையதளம் அம்பலப்படுத்தியிருக்கிறது.

முள்ளிவாய்க்கால் படுகொலை நடந்த இரண்டொரு நாட்களிலேயே, அப்பொழுது தேசியப் பாதுகாப்புச் செயலராக இருந்த எம்.கே. நாராயணனும்,



படிப்பகம்

www.padippakam.com



போர்க்குற்றவாளி ராஜபக்சேவுடன் கைகுலுக்கி உரையாடும் இந்திய அரசின் பாதுகாப்புச் செயலர் சிவசங்கர் மேனன்; அருகில், இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ்.

வெளியுறவுத் துறை செயலராக இருந்த சிவசங்கர் மேனனும் இலங்கைக்குச் சென்றதை, ''போர் முடிவுக்கு வந்துவிட்டதால், அரசியல் தீர்வு குறித்துப் பேசச் செல்வதாக''த் தமிழகத்தில் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால், அவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காகதான் சென்றிருந்தனர்.

இவர்களையடுத்து பிரதமர் மன்மோகன் சிங்கின் சிறப்புத் தூதராக, அவரது முதன்மைச் செயலராக இருந்த டி.கே.ஏ.நாயர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவர் அதிகாரப் பரவல் குறித்துப் பேசுவதற்காகதான் சென்றிருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால், அவரோ இலங்கையிலுள்ள புகழ் வாய்ந்த புத்த மடாலயங்களுக்குச் சுற்றுலா சென்றுவிட்டுத் திரும்பினார். அவர், அரசு நிர்வாக முறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிப் போக்குகள் குறித்துப் பேசுவதற்குதான் இலங்கைக்கு வந்ததாக, ராஜபக்சே அரசு உண்மையைப் போட்டு உடைத்தது.

நான்காம் கட்ட ஈழப் போர் முடிவுக்கு வந்தவுடனேயே இந்திய அரசு போரினால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்காக 500 கோடி ரூபாய் நிதியளித்திருப்பதாகப் பெருமையடித்துக் கொண்டது. ஆனால், அந்நிதி, இனப்படுகொலையை நடத்திய இலங்கை அரசுக்கு அளிக்கப்பட்ட பொருளாதார உதவி தவிர வேறில்லை. போரினால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு 50,000 வீடுகள் கட்டித் தரப்போவதாக இந்திய அரசு தம்பட்டம் அடித்து வருகிறது. ஆனால், போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் கடந்த பிறகும் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு வீடுகூட இந்திய அரசால் கட்டித் தரப்படவில்லை. ஈழத் தமிழ் மக்களின் மறுவாழ்வு குறித்து இந்திய அரசு அக்கறை கொண்டிருப்பதாகக் கூறப்படுவதெல்லாம் பச்சைப் பொய் என்பதற்கு இவை போன்று பல ஆதாரங்களை எடுத்துக் காட்டலாம்.

கடந்த ஜூன் 11 அன்று இலங்கைக்குப் போன சிவசங்கர் மேனன் குழு, ''தமிழர் பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு காண இலங்கையிடம் வலியுறுத்தியதாக''த் தமிழகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால், போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் கடந்த பிறகும் வடக்கு மாகாணத்திற்குத் தேர்தல் நடத்தாமல் இருப்பது குறித்தும், போலீசு நிர்வாகம் உள்ளிட்ட அதிகாரப் பரவலை வழங்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட 13-ஆவது அரசியல் சாசனச் சட்டத் திருத்தம் இலங்கையில் சர்ச்சைக்கு உள்ளாகியிருப்பது குறித்தும் பத்திரிகையாளர்கள் சிவசங்கர் மேனனிடம் கேட்ட பொழுது, அவர், ''இப்பிரச்சினைகளை இலங்கை அரசு தன் சொந்த விருப்பப்படி தீர்த்துக் கொள்ள வேண்டும் '' எனப் பதில் அளித்தார். ஈழத் தமிழர்களின் மறுவாழ்வு குறித்தோ, அவர்களின் அரசியல் உரிமைகள் குறித்தோ இந்தக் குழுவிற்கு மட்டுமல்ல, இந்திய அரசிற்கும் அக்கறை கிடையாது என்பதுதான் இதன் பொருள்.

இலங்கைக்கு கச்சா எண்ணெய் மற்றும் மின்சாரம் விற்பது, ரயில் பாதைகள் அமைத்துக் கொடுப்பது, காங்கேசன் துறைமுகத்தை நவீனப்படுத்திக் கொடுக்கும் குத்தகை உள்ளிட்டு அந்நாட்டின் பல்வேறு துறைகளில் இந்திய அரசும், இந்தியத் தரகு முதலாளிகளும் முதலீடுகளைக் குவித்து வருகின்றனர். இன்னொரு புறம் இலங்கை இராணுவத்துக்குத் தேவைப்படும் இராணுவத் தளவாடங்களை விற்பது, இராணுவப் பயிற்சிகளில் சேர்ந்து ஈடுபடுவது என இலங்கையோடு நெருக்கமான இராணவரீதியான உறவுகளையும் வளர்த்து வருகிறது, இந்திய அரசு. ராஜபக்சேவைப் போர்க் குற்றவாளியாக அறிவித்துத் தண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வரும் வேளையில், அவரை விசாரணையிலிருந்து பாதுகாக்கும் பொறுப்பையும் இந்திய அரசுதான் ஏற்றுக் கொண்டுள்ளது.

இவை தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது, புதிய முதலீடுகளுக்கான ஒப்பந்தங்களைப் போடுவது, தெற்காசியக் கூட்டமைப்பில் இருக்கும் இலங்கையை, இப்பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளும் நண்பனாக வைத்துக் கொள்வது ஆகிய நோக்கங்களுக்குத்தான் இந்தியக் குழுக்கள் அடிக்கடி இலங்கைக்குச் சென்று திரும்புகின்றன. மன்மோகன் சிங் விரைவில் இலங்கைக்குச் செல்ல ஏற்பாடுகள் நடைபெறுவதுகூட இந்த நோக்கங்களுக்காகதான். ஆனால், தமிழக ஓட்டுக் கட்சிகளும், தமிழகப் பத்திரிகைகளும் கூட்டணி அமைத்துக்கொண்டு, மோசடிப் பிரச்சாரத்தின் மூலம் இந்த உண்மைகளைத் தமிழக மக்களிடமிருந்து மறைத்துவிட்டு, இந்திய அரசைத் தேவதூதனைப் போலக் காட்டிவிட முயலுகின்றன.

● திப்பு



படிப்பகம்

www.padippakam.com

## இலவச-கவர்ச்சித் திட்டங்கள்:

# திராவிடக் கட்சிகளைச் சாடும் அதிமேதாவிகளின் அவதூறுகள்

**கார்ப்பரேட் கொள்ளையை மூடிமறைக்கும் கவசமாக ஆளும் வர்க்க ஆசியோடு இலவசத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.**

''நலத்திட்டங்கள்'' என்று தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியாலும் தொடர்ந்து இந்நாள் முதன்மந்திரி ஜெயலலிதாவாலும் அழைக்கப்படும் திட்டங்கள், ''இலவசங்கள்'' என்று மேட்டுக்குடி, ஆதிக்க சாதி அறிவுஜீவிகளாலும் முதலாளிய ஊடகங்களாலும் கொச்சைப்படுத்தப்படுகின்றன.

''சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்'', ''உடல்நலக் காப்புறுதித் திட்டங்கள்'', ''சமூகநலத் திட்டங்கள்'' என்று அவற்றைக் குறிப்பிடும் கருணாநிதி, அவற்றின் அவசியம் குறித்துத் தெளிவான விளக்கங்கள் கொடுத்துள்ளார். இந்த விளக்கங்களை உள்வாங்கிக் கொள்ள மறுக்கும் அறிவுஜீவிகளாகக் காட்டிக் கொள்ளும் அறிவிலிகள், தகுந்த தர்க்க நியாயங்கள் எதுவும் முன்வைக்காது, பொதுவில் ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளுக்கு எதிராக, குறிப்பாகத் திராவிட அரசியல் கட்சிகளையும் தமிழக மக்களையும் அவதூறு செய்கிறார்கள்.

''எதிர்க்கட்சிகளானாலும், ஆளும் கட்சியானாலும், அரசாங்கத்தின் செயல்பாடுகள் அவர்களுக்கு ஒரு பொருட்டாக இல்லை, புத்திசாலித்தனமான இலவசங்களின் தொகுப்பு மட்டும்தான் பொருட்டாக உள்ளது. இலவசங்கள் என்பன அரசின் வருவாயைப் பயன்படுத்திக் கொண்டு, அப்பட்டமான தேர்தல் ஊழல் முறைகேடுகளைச் செய்வது தவிர, வேறொன்றும் இல்லை என்பதை தமிழ்நாட்டு வாக்காளர்கள் சிறிதும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. உண்மையில் இலவசத் திட்டங்கள் எதுவும் இலவசமாகக் கிடைப்பதில்லை. அரசுப் பணம்தான். இதனால் அரசு நிர்வாகம்தான் பாதிக்கப்படுகிறது. இத்தகைய இலவசங்களால் ஒரு இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு மாநில அரசு கடனில் சிக்கிக் கொண்டுள்ளது'' என்கிறார்கள்.

''இந்தி எதிர்ப்பு, தமிழ் மொழியின் பெருமை, ஈழத்தமிழர் ஆதரவு என்று எளிதில் உணர்ச்சியைக் கிளப்பிவிடும் திராவிட அரசியல் சித்தாந்தத்தையும், கொள்கைகளையும் திராவிடக் கட்சிகள் எல்லாம் கை கழுவிவிட்டன. இந்த வெற்றுக் கூச்சல்கள் அரசியல் தவிர, திராவிடப் பொருளாதாரம் என்று அறிவுபூர்வமான பொருளாதாரம் இவர்களுக்கு கிடையாது. பொருளாதாரத்துக்கும் இவர்களுக்கும் ஏதாவது ஒரு தொடர்பு உண்டென்றால், அது இலவசங்கள் அளிப்பது. மேலும் இலவசங்கள், மேலும் மேலும் இலவசங்கள்தாம். 'ஏழை மக்களின் பசியை நாங்கள்தாம் புரிந்து கொண்டிருக்கிறோம்' என்பது எப்போதும் அவர்களின் புகலிடவாதம். இவற்றின் விளைவு தமிழ்நாட்டு வாக்காளர்கள் அரசாங்கத்திடமிருந்து வழக்கமாக இலவசங்களைப் பெறுகிறார்கள். உண்மையில் இலவசங்கள் ஒட்டுமொத்த மாநில மக்களின் மனநிலையில் ஊறிக் கிடக்கின்றன.''

''மொத்தத்தில் இலவசங்களை அறிவிக்காத ஒரு பாரிய அரசியல் கட்சி இல்லை. ஏதாவதொரு இலவசத்துக்காக ஏங்காத ஒரு வாக்காளரே இல்லை. திராவிட பொருளாதாரத்தைப் போலவே அதன் அரசியலும் வெற்று வேட்டுதான். நீண்ட காலமாகவே, 'தமிழின் பெருமை, தமிழ்ச் சுயமரியாதையை மீட்பது' என்பதில் திராவிட அரசியல் பெருமை கொண்டிருக்கிறது. இப்

ரேஷன் கடைகளின் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டத்தை சென்னையில் தொடங்கி வைக்கும் ஜெயா.





படிப்பகம்

www.padippakam.com

போது அவையும் கொள்ளையில் திராவிடக் கட்சிகள் அளிக்கும் தமது பங்கைப் பெறுவதற்காக நீண்ட வரிசையில் காத்திருப்பதாகச் சுருங்கிப் போய்விட்டது'' என்கிறார்கள்.

இவை திராவிடக் கட்சிகளையும், அவற்றின் ''இலவச''த் திட்டங்களையும் அரசியல்-பொருளா தாரத்தையும் மட்டும் விமர்சிப்பவை அல்ல. ஒட்டு மொத்தத் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார வாழ்வைக் கொச்சைப்படுத்தும் பார்ப்பன - பனியா மற்றும் ஆதிக்க சாதித்தனத்தைக் குறிக்கின்றன. இந்து ராம், துக்ளக் 'சோ', ஞாநி சங்கரன், வாசந்தி, சு.சாமி, சிவசங்கரி போன்ற பார்ப்பன மேதாவிகளும் மற்றும் ஆங்கில - அமெரிக்க மோகங்கொண்ட ஆதிக்க சாதி களின் செல்லப்பிள்ளைகளாக வளர்ந்த ஊடகத்தார் களும் தரும் தகவல்கள், மதிப்பீடுகள் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கும் அவதூறுகள்.

தமிழகத்துக்கு வெளியே உள்ள ஓட்டுக் கட்சிகளின் அரசியல், பொருளாதார யோக்கியதை என்ன? அகில இந்திய தேசியம் பேசும் பா.ஜ.க. மற்றும் காங்கிரசு கட்சிகள் பார்ப்பன-பனியா ஆளும் வர்க்க அரசியல் பொருளாதாரக் கொள்கைகளையே, நேரடி, மறைமுக மதவாத நோக்கிலும், பிரிவினைவாத, பயங்கரவாத, தீவிரவாதப் பீதியூட்டி ஆதாயம் அடையும் முறையிலும் செயல்படுத்துகின்றன. மேற்கு வங்கம், கேரளத்தில் போலி கம்யூனிஸ்டுகள் சந்தர்ப்பவாத, பித்தலாட்ட அர சியல் நடத்துகிறார்கள். மாயாவதி, முலயம், லாலு போன்றவர்கள் சமூகநீதி என்ற பெயரில் பிழைப்புவாத அரசியல் நடத்துகிறார்கள். 1990-களில் தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கம் புகுத்தப்பட்டபிறகு, திராவிடக் கட்சிகள் உட்பட நாட்டிலுள்ள எல்லா ஓட்டுக் கட்சிகளும் கட்சி வேறுபாடின்றி புதிய பொருளாதாரக் கொள்கையை வரித்துக் கொண்டு விட் டன. இந்த உண்மையை மறைத்துவிட்டு கட்சிகளின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளையும் செயல் பாடுகளையும் ஆய்வு செய்வதும் மதிப்பீடு செய்வதும் அறிவுஜீவித்தனம் அல்ல; அறிவிலிகளின் பித் தலாட்டம்தான்.

''இலவசத் திட்டங்கள்'' என்பனவற்றின் வரலாறு என்ன? இவை எதற்காக, எப்போதிலிருந்து அவசிய மாயின? இந்தியாவில், தமிழ்நாட்டில், திராவிடக் கட்சி களால்தான் இவை புகுத்தப்படுகின்றனவா? பொருளா தாரக் கொள்கைகள் எதுவும் இல்லாததால், ''இலவசத் திட்டங்கள்'' கொண்டு வரப்பட்டனவா? ''இலவசங் கள்'' இல்லையானால் ஏற்படும் விளைவுகள் என்ன? இப்படிப்பட்ட கேள்விகளையும் அவற்றுக்குரிய பதில் களையும் கவனத்தில் கொள்ளாமல் அரசியல், பொருளாதார ஆய்வுகள், மதிப்பீடுகளை வெளியிடுவது உண்மையில் நாணயமற்ற செயல்.

திராவிடக் கட்சிகள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ராஜாஜி, காமராஜர் தலைமையிலான அரசுகள் பொருளா தார நிபுணத்துவத்தோடு, திறமையான நிர்வாகத்தோடு தமிழ்நாட்டில் ஆட்சி நடத்தியதாக ஒரு பொய் பல ஆண்டுகளாகப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. ஆனால், அவர்கள் ஆட்சியில்தான் ''அவுன்சு'' (ஒரு ஆழாக்கு) அரிசி ரேசன்கடைகளில் தரப்பட்டன. வாரத்தில் ஒருநாள் சாப்பிடாமல் இருக்கும்படி பொருளா தாரப் பேரறிவோடு காங்கிரசு ஆட்சியில் மக் களை வலியுறுத்தினார்கள். அதனாலேயே ஆட்சி யிலிருந்து துரத்தப்பட்டு, திரும்பவும் ஆட்சிக்கு வரவே முடியாமல் தவிக்கிறார்கள்.

சென்னையில் நடைபெற்ற அரசு விழா ஒன்றில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை விநியோகிக்கும் மு.கருணாநிதி. (கோப்புப் படம்)




கருணாநிதியின் 2006-ஆம் ஆண்டு இலவசத் திட்டங்களைக் கேலி கிண்டல் செய்த பார்ப் பன-பாசிச ஜெயலலிதா, நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் தோற்று விடுவோமோ என்ற அச்சத்தால் அவரை, விஞ்சிவிடும் அளவு ''இல வசங்களை'' அறிவித்தார். கடன்படாமல் பொருளாதாரப் புலியாக ஆட்சி நடத்தியதாகக் கூறிக் கொள்ளும் ஜெயாவின் ஆட்சியில்தான் நெசவாளர்களுக்குக் கஞ்சித் தொட்டியும், தமிழ கத்தின் நெற்களஞ்சியமாக அறியப்பட்ட தஞ்சை யில் விவசாயிகள் எலிக்கறி சாப்பிட்டு உயிர் பிழைத்தார்கள்.

தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையை அம லாக்கிவரும் மன்மோகன் - மாண்டேக் சிங் ஆகிய பொருளாதாரப் புலிகளின் நிர்வாகத்தில், தொடர்ந்து விண்ணை முட்டும் விலைவாசி உயர்வால் விவசாயிகள், பழங்குடிகள், மீனவர் கள் உள்ளிட்ட உழைக்கும் மக்கள் வாழ்வாதாரங்



படிப்பகம்

www.padippakam.com

களைப் பறிகொடுத்து அலையும் நிலையில், தொழிலாளர்கள் ஒப்பந்தக் கொத்தடிமைகளாக்கப்படும் சூழலில், மலிவுவிலை அல்லது இலவச அரிசித் திட்டங்கள் இல்லை என்றால் எலிக்கறியும், கஞ்சித் தொட்டியும்கூட மக்களைக் காப்பாற்ற முடியாமல் போய் விட்டிருக்கும். கூடவே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் அரசு சாராயக் கடைகளும் முறையே பெண்களையும் ஆண்களையும் போதையில் மூழ்கடிக்காமல் போயிருந்தால், அவர்கள் கொந்தளித்துப் போயிருப்பார்கள்.

புதிய பொருளாதாரக் கொள்கை புகுத்தப்பட்டவுடன் மக்களிடையே எழுந்த கொந்தளிப்பை பாசிச அடக்குமுறையால் சமாளிக்க முடியாததால், உலகவங்கி, ஐ.எம்.எஃப், உலக வர்த்தகக் கழகம் ஆகியவை வழியே அமெரிக்க எஜமானர்கள் வகுத்துக் கொடுத்த வழிமுறைகளில் ஒன்றுதான் கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு மூலம் சமூக நலத் திட்டங்களை இலவசமாக முதலாளிகளே செய்வது என்பதாகும். அந்த வேலையை அவர்கள் செய்ய மறுத்து விட்டார்கள். தமது புதிய பொருளாதார திட்டங்களின் பலன்கள் கசிந்து மக்களைச் சென்றடையும் வரை காத்திருக்கச் சொன்னார்கள், மாண்டேக் சிங் - மன்மோகன் - சிதம்பரம் கும்பல். பா.ஜ.க.வின் ''ஒளிரும் இந்தியா'', காங்கிரசின் ''கசிந்து மக்களுக்கு வரும் பலன்கள்'' என்கிற ''பயாஸ்கோப்'' படங்காட்டும் முயற்சிகள் தோற்றுப்போன பிறகுதான், வேலை உத்திரவாதம், வேலைக்கு உணவு, ஜவகர், இந்திராகாந்தி ஆகியோர் பெயரில் பல்வேறு ''இலவசத்'' திட்டங்களை அமலாக்கினார்கள். இவையெல்லாம்கூட, காங்கிரசு, பா.ஜ.க. ஆட்சிகள் ஊழல் மோசடிகளில் மூழ்கிக் கிடக்கையில், இவற்றோடு ''இலவசத் திட்டங்களை'' இணைத்து நாட்டுக்கே முன்னுதாரணமாக விளங்குகின்றனர், கருணாநிதியும் ஜெயலலிதாவும்.

''எந்த அரசாங்கமாவது சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைப் புறக்கணித்து, வளர்ச்சித் திட்டங்களில் மட்டும் கவனம் செலுத்தினால், அது ஏழை, எளிய மக்கள் நலன்களை அலட்சியப்படுத்துவதாகும்'' என்ற புதிய ஆட்சியாளராகிய ஜெயாவை கருணாநிதி சமீபத்தில் எச்சரித்துள்ளார். இந்த எச்சரிக்கை, வெறும் அரசியல் உள் நோக்கம் கொண்டதல்ல. ஹூண்டாய், நோக்கியா, டாடா போன்ற அந்நிய, உள்நாட்டு முதலாளிகளின் நலன்களை மட்டும் கவனித்துக் கொண்டு, சமூக நலத் திட்டங்களைக் கைவிட்டால் மக்களின் கடுங்கோபத்துக்கும் கொந்தளிப்புக்கும் ஆளாக நேரிடும் என்பதுதான் அந்த எச்சரிக்கை. உலகவங்கி, ஐ.எம்.எஃப். முதலிய உலகப் பொருளாதார, நிதி அமைப்புகள் முதற்கொண்டு, ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசு நாடுகளின் முன்னணிப் பொருளாதார நிபுணர்கள் பலரும் ஏற்றுக் கொண்டு, உலக நாடுகளுக்கு விடுத்துவரும் எச்சரிக்கையும் இதுதான்.

சமூகநலத் திட்டங்கள், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், சமூகக் காப்புறுதித் திட்டங்கள் என்று கருணாநிதி விளக்கும் போது, சமூக நலனில் முதன்மை அக்




கறை கொண்டு பேசுகிறார் என்பதல்ல பொருள். சமூகத்திடமிருந்து, (பொது மக்களின் ஆத்திரம், கோபம், கொந்தளிப்பிலிருந்து) அரசும், ஆளும் வர்க்கங்களும் கார்ப்பரேட் முதலாளிகளும் தங்களையும் தங்கள் நலன்களையும் காத்துக் கொள்வதற்கான திட்டங்கள் தேவை என்றுதான் பொருள். ஏதுமற்ற ஏழைகளாக பெரும்பான்மை மக்களை ஓட்டாண்டிகளாகவும், விரல்விட்டு எண்ணக்கூடியவர்களை உலகப் பணக்காரர்களாகவும் செய்யும் வளர்ச்சித் திட்டங்களை எவ்வளவு நாள்தான் மக்கள் பொறுத்துக் கொள்வார்கள்! ஒருவேளை பொங்கி எழுந்தால் கார்ப்பரேட் சாம்ராஜ்ஜியங்களைத் தகர்த்து விடுவார்கள் அல்லவா! இந்த அச்சத்தின் விளைவாக, ஆளும் வர்க்கங்களின் ஆசியோடு வழங்கப்படுபவைதாம் இந்த இலவசத் திட்டங்கள்.

ஆனால், அதிமேதாவிகளாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் இலவச எதிர்ப்பாளர்களோ, இரண்டு உண்மைகளைத் தமது சுயநலம் காரணமாக மூடிமறைக்கிறார்கள் அல்லது காண மறுக்கிறார்கள். ஒருபுறம் தமிழகத்தில் ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு இலவசத் திட்டங்கள் வந்தாலும், மறுபுறம் நூறு இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு கார்ப்பரேட் முதலாளிகளுக்கு இலவசமாகப் போய்ச் சேரும் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. ''இலவசங்களை'' எதிர்க்கும் இந்த அதிமேதாவி அறிவுஜீவிகளும் மேற்கண்ட மாதிரியான இலவசத்திட்டங்களால்தான் உடலையும் அறிவையும் வளர்த்துக் கொண்டுள்ளார்கள். இப்போதும் கார்ப்பரேட் முதலாளிகள்கோடி கோடியாய்ப் பெறும் இலவசச் சூறையாடல்களிலிருந்து ஒருபகுதியைத்தான் தகுதியற்ற ஊதியமாய்ப் பெற்று வாழ்கிறார்கள்.

● ஆர்.கே.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

ம.க.இ.க; பு.ஜ.தொ.மு; ஆகிய அமைப்புகள் இணைந்தும், ஓசூரில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக பு.ஜ.தொ.மு; வி.வி.மு; ஆகிய அமைப்புகள் இணைந்தும் ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

தனியார் பள்ளிகளின் பகற்கொள்ளையை கட்டண நிர்ணயக் கமிட்டிகளோ, அரசோ, ஓட்டுக் கட்சிகளோ கண்டு கொள்வதில்லை. இக்கொள்ளையால் பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் -மாணவர்களைத் திரட்டி ம.உ.பா.மையம், பு.மா.இ.மு. தலைமையில் பல பகுதிகளில் போராட்டங்கள் நடந்துள்ளன. இதுதவிர, தனியார் பள்ளிகளில் எல்.கே.ஜி; யு.கே.ஜி; முதல் வகுப்பு ஆகியவற்றில் கல்வி உரிமைச் சட்டம்-2009 இன் படி, 25 சதவீத இடங்கள் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக ஒதுக்கப்பட வேண்டும் என்ற விதியை நடைமுறைப்படுத்தக் கோரி பெற்றோர்களை அணிதிரட்டி இவ்வமைப்புகள் போராட்டங்களை நடத்தியுள்ளன. சென்னையில் 20.3.2011 அன்று லயோலா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் கட்டணக் கொள்ளை - அட்டூழியங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம், 22.6.2011 அன்று வில்லிவாக்கம் பத்மசாரங்க பாணி மெட்ரிக்குலேசன் பள்ளியின் பகற்கொள்ளைக்கு எதிரான ஆர்ப்பாட்டம், 23.6.2011 அன்று மதுரவாயல் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்1, பிளஸ்2 மாணவர்கள் படித்துவந்த வரலாறு மற்றும் கணக்குப் பதிவியல் பாடப்பிரிவு நீக்கப்பட்டதை எதிர்த்து திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் முன்பாக மாணவர்களைத் திரட்டி முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம், சிதம்பரத்தில் காமராஜர் மெட்ரிகுலேசன் பள்ளியின் கட்டணக் கொள்ளைக்கும் அட்டூழியங்களுக்கும் எதிரான போராட்டம், மாவட்ட ஆட்சியரை நிர்பந்தித்து முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் ஆய்வாளர் மூலம் இப்பள்ளியில் விசாரணை நடத்த ஏற்பாடு செய்தது - என தொடர்ச்சியாக இவ்வமைப்புகள் போராட்டங்களை நடத்தி, அவற்றில் முதற்கட்ட வெற்றியைச் சாதித்து, பெற்றோர்கள்- மாணவர்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளன.

குறிப்பாக, கடலூர் மாவட்டத்தின் பல பகுதிகளில் தொடர் பிரச்சாரமும் போராட்டங்களும் ம.உ.பா.மையத்தால் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, பெற்றோர்கள் தாங்களே கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கத்தினை உருவாக்கிக் கொண்டு போராடி வருகின்றனர். ஜூன் 6-ஆம் தேதியன்று கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாகவும், ஜூன் 13-ஆம் தேதியன்று விருத்தாசலத்திலும் ம.உ.பா.மையத்துடன் இணைந்து மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கம் உண்ணாநிலை போராட்டத்தை நடத்தியது.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் சமச்சீர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரி அறிக்கை விடுத்துவிட்டு முடங்கிவிட்ட நிலையில், முன்னணி என்ற பெயருக்கேற்ப களத்தில் இறங்கிப் போராடும் தகுதியுடைய அமைப்பாக பு.மா.இ.மு. தன்னை நிரூபித்துக் காட்டியுள்ளது. கைது, பொய் வழக்கு, போராட்டங்களுக்கு அனுமதி மறுப்பு, அச்சுறுத்தல் - என போலீசு பல வழிகளில் தொல்லைப்படுத்தியபோதிலும், இவற்றைத் துச்சமாக மதித்து இவ்வமைப்புகள் போராட்டப் பாதையில் தொடர்ந்து முன்னேறி வருகின்றன. தனியார்மய-தாராளமயக் கொள்கைகளையும் அவற்றின் கொடிய விளைவுகளையும் எதிர்த்த பல போராட்டங்களில், மக்கள் நெருக்கமாக உணரும் பிரச்சினையாக இக்கல்விப் பிரச்சினை மாறியுள்ளதால், அனைத்து தரப்பு உழைக்கும் மக்களும் இப்போராட்டங்களை வரவேற்று ஆதரிப்பதோடு தாமும் ஊக்கமுடன் பங்கேற்றும் வருகின்றனர். தமிழகமெங்கும் இப்புரட்சிகர அமைப்புகளின் வீச்சான பிரச்சாரமும் போர்க்குணமிக்க போராட்டங்களும் தொடர்ந்து முன்னேறி வருகின்றன.

-பு.ஜ.செய்தியாளர்கள்.













படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11



# விவசாயிகள் மீது தடியடி: பேயாட்சி!

திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், விழுப்புரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் விளையும் நெல்லை விற்பனை செய்யப் போதுமான அளவிற்கு நேரடி நெல் கொள்முதல் விற்பனை நிலையங்கள் அம்மாவட்டங்களில் திறக்கப்படுவதில்லை. இதனால், அம்மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பாலான விவசாயிகள் வேறு வழியின்றி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாகத்தான் நெல்லை விற்று வருகின்றனர். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நெல்லுக்கு அரசு நிர்ணயித்திருக்கும் கொள்முதல் விலை கிடைக்காது. வியாபாரிகள் கூட்டணி கட்டிக்கொண்டு தீர்மானித்துச் சொல்லும் விலையில்தான் நெல் மூட்டைகளை விற்க முடியும். சட்டபூர்வமாக நடந்துவரும் இந்தக் கொள்ளையை விவசாயிகள் தட்டிக் கேட்க முயன்றால், போலீசின் குண்டாந்தடியும் பொய் வழக்கும்தான் அவர்கள் மீது பாயும். இந்த அநியாயம்தான் கடந்த ஜூன் மாதம் 2-ஆம் தேதி விழுப்புரத்திலும் நடந்தது.

விழுப்புரம் நகரில் அமைந்துள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தினமும் ஏறத்தாழ 2,000 நெல் மூட்டைகள் விற்பனைக்கு வருவது வழக்கம். கடந்த ஜூன் 2 அன்று வழக்கத்தைவிட அதிகமாக நெல் மூட்டைகள் விற்பனைக்கு வந்திருந்தன. 75 கிலோ கொண்ட ஒரு மூட்டை நெல் 750 ரூபாயிலிருந்து 825 ரூபாய் வரை விற்பனையாகும் என விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், அன்று 75 கிலோ மூட்டைக்கு ரக வாரியாக 360 ரூபாய் முதல் 639 ரூபாய் வரை விலை நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக ஒழுங்குமுறை விற்பனைக் கூட அதிகாரிகள் அறிவித்தனர்.

தவிட்டின் விலையைவிட நெல்லின் விலை குறைவாக நிர்ணயிக்கப்பட்டிருப்பதைக் கேட்ட விவசாயிகள் கொதித்துப் போனார்கள். நெல் மூட்டைகள் அதிக அளவில் விற்பனைக்கு வந்திருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு, அதிகாரிகளும் வியாபாரிகளும் கூட்டணி கட்டிக் கொண்டு தம்மிடம் பகற்கொள்ளை அடிக்க முயலுவதைப் புரிந்து கொண்ட விவசாயிகள், நெல்லுக்கு நியாயமான விலை நிர்ணயிக்கக் கோரி சாலை மறியலில் ஈடுபட்டனர். உள்ளூர் போலீசு துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் வந்திறங்கிய போலீசு பட்டாளம், பிரச்சினையைப் பேசித் தீர்ப்பதற்கு முயலாமல், விவசாயிகளை அடித்துத் துரத்தியது.

விவசாயிகளிடமிருந்து அடிமாட்டு விலைக்கு வாங்கப்படும் நெல்லை, வியாபாரிகள் அதிகாரிகள் துணையோடு நேரடி கொள்முதல் விற்பனை நிலையங்களில் அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு விற்றுக் கொள்ளை இலாபம் அடிக்கும் மோசடித்தனத்தை அம்பலப்படுத்தியிருக்கிறார், விவசாயிகள் விழிப்பு உணர்வு சங்கத்தின் தலைவர் சந்திரசேகரன். ''திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், விழுப்புரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் மட்டும் ஏறத்தாழ 30 இலட்சம் டன் நெல்லை வியாபாரிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் கொள்முதல் செய்கின்றனர். சராசரியாக ஒரு குவிண்டாலுக்கு அரசு நிர்ணயித்துள்ள விலையைவிட 200 ரூபாய் குறைவாக விலை வைத்தாலே, விவசாயிகளுக்கு 600 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதாக''க் கூறுகிறார், அவர். விவசாயிகளுக்கு ஏற்படும் இந்த இழப்பு வியாபாரிகளுக்குக் கொள்ளை இலாபமாக, அதிகாரிகளுக்கு இலஞ்சமாகப் போய்ச் சேருகிறது.

ஜெயா பதவியேற்றவுடனேயே, ''விவசாய உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கச் செய்து, விவசாயத்தில் மகத்தான மறுமலர்ச்சியை ஏற்படுத்தப் போவதாக'' அறிவித்தார். ஆனால், விழுப்புரத்தில் நெல்லுக்கு நியாயமான விலை கோரி போராடிய 'குற்றத்திற்காக' ஆறு விவசாயிகள் மீது பொய்வழக்குப் போட்டு சிறையில் தள்ளியிருக்கிறது, அவரது அரசு.

விழுப்புரத்தில் சாலை மறியலில் ஈடுபட்ட விவசாயிகள் மீது தடியடி நடத்த உத்தரவிட்ட போலீசு துணைக் கண்காணிப்பாளர், ''இது ஒன்னும் பழைய காலம் இல்லடா'' எனச் சொல்லி அடித்தாராம். ஆம், இது இருண்ட காலம் - அத்தியாயம்-3 அல்லவா!



படிப்பகம்